# தமிழ் நாட்டில்
# ஊராட்சிகளின் பணி குறித்த
# ஆண்டறிக்கை

## [2006–07 (ம) 2007–08]

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 166Aன்படி தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த 2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை**
**தமிழ்நாடு அரசு**

**மு.க. ஸ்டாலின்,**
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

**அணிந்துரை**

ஊராட்சி அமைப்புகளின் பிறப்பிடமாகத் திகழும் தமிழகத்தில் மூன்றடுக்கு ஊராட்சிகள் சிறந்த முறையில் செயலாற்றிட, அதிகப்படியான அதிகாரங்கள் மற்றும் அத்தியாவசிய கடமைகளை நிறைவு செய்ய தேவையான நிதி ஆதாரங்களை தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான கழக அரசு தாராளமாக வழங்கி வருகிறது.

ஊராட்சிகளின் திறமையான நிர்வாகத்திற்கு தேவையான குறைந்தபட்ச நிதி, வளர்ச்சித் திட்டங்களில் ஊராட்சிகளின் பங்கினை அதிகரித்தல், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் நிலையான பதவிக் காலத்திற்கு வழிவகை செய்தல், ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கு வாகன வசதி, கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி, ஊராட்சிகளில் தொலைபேசி வசதி என பல்வேறு வசதிகளையும், திட்டங்களையும் செயல்படுத்தி ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிர்வாக அமைப்புகளாக செயல்பட கழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

2007–08ஆம் ஆண்டு வரை மாவட்ட ஊராட்சிகளின் ஆண்டறிக்கை மட்டுமே சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு வந்தது. இந்த நிலையை மாற்றி தற்போது, மாநில அளவில் ஊராட்சி அமைப்புகளின் செயல்பாட்டை விளக்கும் வகையில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கையினை சட்டமன்றப் பேரவையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையை செயல்படுத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**(மு.க. ஸ்டாலின்)**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

## முகவுரை

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 165ன்படி 2007–2008ஆம் ஆண்டு வரை மாவட்ட ஊராட்சிகளின் ஆண்டறிக்கைகள் மட்டுமே சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு வந்தன. அதற்கு பதிலாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த செயல்பாடுகளையும் வெளிப்படுத்தும் வகையிலான அறிக்கையினை ஆண்டுதோறும் சட்டமன்றப் பேரவையில் வைத்திட அரசு முடிவு செய்து, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 165க்கு உரிய திருத்தத்தினை வெளியிட்டுள்ளது.

இத்திருத்தம், நடப்பு ஆண்டிலிருந்து தான் நடைமுறைக்கு வரும் என்ற போதிலும், 2006 மே மாதம் முதல் ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கிய அதிகாரங்கள், கூடுதல் நிதி ஆதாரங்கள், வெளியிடப்பட்ட சட்டத் திருத்தங்கள், விதித் திருத்தங்கள், முக்கிய அரசாணைகள் ஆகியவற்றை விரிவாக விளக்கும் வகையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் பணி குறித்த 2006–07, 2007–08ஆம் ஆண்டுக்களுக்கான ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(க. அஷோக் வர்தன் ஷெட்டி)**

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | முன்னுரை | 1 |
| 2 | ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் | 5 |
| 3 | உள்ளாட்சியில் மக்களாட்சி – அதிகாரப் பகிர்வு | 13 |
| 4 | சட்டத் திருத்தங்கள் | 43 |
| 5 | விதித் திருத்தங்கள் | 51 |
| 6 | 2006–07 (ம) 2007–08ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட முக்கிய அரசாணைகள் | 55 |
| 7 | ஊராட்சிகளின் நிதி | 69 |
| 8 | திறன் மேம்பாடு | 75 |

# 1. முன்னுரை

# 1. முன்னுரை

தமிழக உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். அந்த காலகட்டங்களில் சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்கள் பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குதல் போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாகத் தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் **"குடவோலை முறை"** எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேய பேரரசின் நிர்வாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகார பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், ''மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1950'' ஆகும். 1957ஆம் ஆண்டு ''உள்ளாட்சி நிர்வாக சீரமைப்பு'' குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து ''மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1958'' மற்றும் ''மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம், 1958'' ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன.

அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சி முறை.

ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

இ) கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக / மறைமுகமாக தேர்ந்தெடுத்தல்.

ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்.

உ) மாவட்ட போர்டுகளை கலைத்தல்.

ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுவை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை நல்லமுறையில் செயல்பட்டு, அவைகளுக்கு முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன் பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 01.02.1977 மற்றும் 12.09.1979 வரை நீட்டிக்கப்பட்டது.

அதன் பின்னர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1986ல் அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை, ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிர்வகித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996ஆம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிர்வகித்தனர்.

ஊராட்சி அமைப்புகள் பல மாநிலங்களில், பல வடிவங்களில் செயல்பாட்டில் இருந்த போதிலும் முறையாக தேர்தல்கள் நடத்தப்படாமை, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லாமை, போதுமான அதிகாரங்கள் வழங்கப்படாமை மற்றும் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இவ்வமைப்புகள் மக்களிடம் நற்பெயரைப் பெற இயலவில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு அரசமைப்புச் சட்டத்தின்படி ஊராட்சி அமைப்புகள் நிலையானதாகவும், நீடித்ததாகவும், வலுவானதாகவும் விளங்கிட ஏதுவாக 1992ஆம் ஆண்டு அரசமைப்பு 73ஆம் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக, ஊராட்சி அமைப்புகளில் பல அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதனடிப்படையில், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு 22.04.1994 முதல் நடைமுறைக்கு வந்தது.

அரசமைப்பு (73வது திருத்த) சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆகியவை ஊராட்சி அமைப்பு முறையில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தன. அவையாவன:

அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் – கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில். (தமிழ் நாட்டில் 12,618 கிராம ஊராட்சிகள், 385 வட்டார ஊராட்சிகள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.)

ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவதற்கு முன்போ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவோ தேர்தல்கள் நடத்தப்படும்.

இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பின் மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் பதவியிடங்கள், தலைமை பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

ஈ) உறுப்பினர் மற்றும் தலைமை பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்.

உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை தொடர்ந்து நடத்துவதற்கு சுயசார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்குமான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏற்படுத்துதல்.

ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய ''கிராம சபை'' கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 165ஆம் பிரிவின்படி மாவட்ட ஊராட்சிகள் முந்தைய ஆண்டில் அதன் நடவடிக்கைகளைப் பற்றிய உண்மையான மற்றும் முழுமையான விவரங்களடங்கிய அவற்றின் ஆண்டு அறிக்கை ஒன்றைத் தயாரித்து அவற்றை அரசுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அரசானது, அத்தகைய அனைத்து அறிக்கைகளையும் அவற்றின் மீதான அதன் கருத்துக்களையும் சேர்த்து சட்டமன்றப் பேரவையின் முன்பு வைத்தல் வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன்படி தமிழ்நாட்டில் மாவட்ட ஊராட்சிகள் ஆலோசனை வழங்குதல் மற்றும் திட்டமிடுதல் என்ற வகையில் மட்டுமே தம் பங்கினை ஆற்றி வருகின்றன. திட்டங்களை உண்மையிலேயே நடைமுறைப்படுத்துவதும், நிறைவேற்றுவதுமான முக்கிய பணிகள் ஊராட்சி ஒன்றியங்களாலும், கிராம ஊராட்சிகளாலும் செய்யப்படுகின்றன. ஊராட்சி அமைப்பு முறையின் மூன்று அடுக்குகளில் ஒன்றான மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்த வரை மட்டுமே தற்போது சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படும் அறிக்கைகள் இருப்பதால் அவை பகுதி அளவினதாக மட்டுமே இருக்கின்றன. இந்த அறிக்கைகள் இம்மாநிலத்திலுள்ள மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகள் அனைத்தையும் பொறுத்த அளவிலான, நிதி வழங்குதல், தேர்தல்களை நடத்துதல், பணியாற்றுதல் ஆகியவற்றின் ஒட்டுமொத்தமான ஆய்வுக்காட்சியைத் தரவல்லனவாக இல்லை. மிக உயர்ந்த சட்டமியற்றும் அதிகார அமைப்பான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமர்பிக்கப்படும் ஒரு அறிக்கையானது மாநிலத்திலுள்ள மூன்றடுக்கு ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த மிகப்பெரிய அளவிலான பரந்துபட்ட காட்சியை விளக்கும் அறிக்கையாக விளங்கவேண்டுமேயல்லாது, வெறுமனே மாவட்ட ஊராட்சிகளின் மிகக்குறுகிய செயல்பாடுகளை உள்ளடக்கிய ஒரு அறிக்கையாக விளங்கக்கூடாது.

> ***பிரிவு 166 A***
> ***ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டு அறிக்கை.***
> *– அரசானது இம்மாநிலத்தில் ஊராட்சிகளின் பணி பற்றிய ஆண்டு அறிக்கை ஒன்றினை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைத்தல் வேண்டும்.*

எனவே, அரசானது, தனிப்பட்ட மாவட்ட ஊராட்சியின் அறிக்கைகளை சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்குப் பதிலாக முழுமையான அளவில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் நிலை என்பது பற்றிய விரிவான ஆண்டு அறிக்கை ஒன்றினை சட்டமன்றப் பேரவையில்

வைக்கப்படுதல் வேண்டும் என முடிவு செய்தது. இதனடிப்படையில் 2008ஆம் ஆண்டு சட்டம் எண்34ன் படி அரசானது மாவட்ட ஊராட்சிகளின் ஆண்டு அறிக்கையினை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைத்தல் வேண்டுமென்ற தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 165ன் உட்பிரிவு (2) ஐ 18.06.2008 முதல் நீக்கியும் "அரசானது இம்மாநிலத்தில் ஊராட்சிகளின் பணி பற்றிய ஆண்டு அறிக்கை ஒன்றினை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைத்தல் வேண்டும்" என்ற புதிய பிரிவு 166A ஒன்றினை சேர்த்தும் சட்டமியற்றியது.

இதனடிப்படையில், மேற்படி சட்டத்திருத்தம் கொண்டுவரப்பெற்ற பின்பு, 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் இம்மாநிலத்திலுள்ள ஊராட்சிகளின் முழுமையான செயல்பாடுகளை உள்ளடக்கிய பரந்த அளவிலான முதல் அறிக்கை இப்பேரவை முன்பு வைக்கப்படுகிறது.

# 2. ஊராட்சிகளுக்கான தேர்தல்

# 2. ஊராட்சிகளுக்கான தேர்தல்

## 2.1. மாநில தேர்தல் ஆணையம்

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கும் தேர்தலை நடத்துவதற்கான கண்காணிப்பு, நெறிப்படுத்துகை மற்றும் கட்டுப்பாடு, அரசமைப்பின் சட்டக்கூறு 243K மற்றும் 243ZAன் படியும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239ன் படியும், ஏற்படுத்தப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் மேவி நிற்கும். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர், அரசமைப்பின் சட்டக்கூறு 243 Kன்படி ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார்.

2005ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 15ன்படி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டு கால அளவிற்கு பதவி வகிப்பதற்கும், மறு நியமனம் செய்யப்படுவதற்கும் தகுதி உடையவர் ஆவார். ஆனால் மேற்படி சட்டத்தில் வயது வரம்பு தொடர்பாகவோ, எத்தனை முறை மறு நியமனம் செய்யப் படலாம் என்பதற்கான எண்ணிக்கையோ நிர்ணயம் செய்யப்படவில்லை. இது குறித்து சென்னை உயர்நீதி மன்றம் 16.03.2006 அன்று வழங்கிய தீர்ப்பில் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையரை வயது வரம்பு இல்லாமலோ அல்லது குறிப்பிட்ட பதவி காலங்கள் ஏதும் இல்லாமலோ, அவரை மறு நியமனம் செய்வதற்கான அரசின் அதிகாரமானது முற்றிலும் நியாயம் அற்றது எனவும் அரசமைப்பின் சட்டக்கூறு 14ஐ மீறியதாகும் எனவும் தீர்ப்பளித்தது. எனவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 239ம் பிரிவில் (2)ஆம் உட்பிரிவில் (ஆ) எனும் கூறுக்கு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் அவர் பதவி வகிக்கும் காலத்தின்போது அறுபத்து ஐந்து வயது நிறைவுறுவாரானால் ஓய்வு பெறுதல் வேண்டும் எனவும் இரண்டு ஆண்டு கால அளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் எனவும் 2007ஆம் ஆண்டு சட்டம் எண் 24ன்படி 08.06.2007 முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. மேலும், இரண்டு பதவி காலத்திற்கு மறு நியமனம் செய்யப்படுவதற்கு தகுதி உடையவர் எனவும், ஆனால் மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக பதவி வகிக்க இயலாது எனவும் வரையறுக்கப்பட்டது.

> ***பிரிவு 239 (2)(ஆ)***
>
> *தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுக்கால அளவிற்கு பதவி வகிப்பார். மற்றும், அவர் தொடர்ந்தார்போல் இரண்டு கால அளவிற்கு மறு நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதி உடையவர் ஆவார்.*
>
> *ஆனால் நபர் எவரும் மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராகப் பதவி வகித்தல் கூடாது.*
>
> *மேலும், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர், அவர் பதவி வகிக்கும் காலத்தின் போது அறுபத்து ஐந்து வயது நிறைவுருவாரானால் ஓய்வு பெறுதல் வேண்டும்.*

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, மே 2006ல் இரண்டு ஆண்டு கால அளவிற்கு நியமனம் செய்யப்பட்ட, தற்போதைய தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக பதவி வகிக்கும் திரு. தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. (ஓய்வு), இரண்டாவது முறையாக 22.05.2008 முதல் மீண்டும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக தமிழ்நாடு ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## 2.2. பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் – ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243Eல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, ஆகியவை இதற்கு வழிவகை செய்கிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து, அப்பிரிவினரின் மக்கள்தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின் கீழ், சுழற்சி முறையின் கால அளவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 விதி 7ஐ, அரசாணை நிலை எண்.105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 01.09.2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்டகாலமாக தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டை சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது.

## 2.3. ஊராட்சி அமைப்புகளுக்கு 2006ல் நடைபெற்ற சாதாரணத் தேர்தல்கள்

> ***28A தேர்தலுக்கான சிறப்பு வழிவகை***
>
> *இச்சட்டம் அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் அல்லது வெளியிடப்பட்ட ஆணைகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றுக்கு 14.07.2006க்கு பின் உடனடியாக நடைபெறும் முதல் தேர்தல், 14.07.2006 அன்று உள்ள மண்டல தொகுதியின் பரப்பளவு, ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியில் உள்ள வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையிலேயே அமைந்திருக்கும்.*

உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்றாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006ல் நடத்தப்பட்டன. கிராம ஊராட்சி வாரியான 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் மே, 2006ல் தான் பெறப்பட்டதால், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு களின் வார்டுகளை புதிதாக

வரையறை செய்ய போதிய கால அவகாசம் இல்லை. மேலும், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளுக்கான எல்லை மறுவரையறை செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வது சரியானதாக இருக்கும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல் 28A எனும் புதிய பிரிவு 2006ஆம் ஆண்டு சட்டம் எண் 17ன்படி 14.07.2006 முதல் ஏற்படுத்தப்பட்டு ஏற்கனவே உள்ள வார்டு அமைப்புகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஊரக பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 76 சதவீதம் மக்கள் வாக்களித்தனர். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பதவிகளுக்கு நேரடித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மேலும், கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல்களும் நடத்தப்பட்டன. மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையிலும், கிராம ஊராட்சிகளின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையிலும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஒரு உறுப்பினர் வார்டுகளையும் கிராம ஊராட்சிகள் ஒரு உறுப்பினர் மற்றும் பல உறுப்பினர் வார்டுகளையும் கொண்டுள்ளன.

### 2.4 நேரடித் தேர்தல்கள் – 2006

தமிழ்நாட்டில் மூன்றாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் இரண்டு கட்டங்களாக - முதல் கட்டத் தேர்தல் 13.10.2006 அன்றும், இரண்டாவது கட்டத் தேர்தல் 15.10.2006 அன்றும் நடைபெற்றது.

**அட்டவணை 2.1**

**அக்டோபர் 2006ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு நேரடித் தேர்தல் நடைபெற்ற விவரம்**

| பதவியிடங்கள் / தலைமைப் பதவியிடங்கள் | மொத்த வார்டுகள் எண்ணிக்கை | தேர்தல்கள் நடைபெற்ற மொத்த பதவியிடங்கள்/ தலைமைப் பதவியிடங்கள் எண்ணிக்கை | தேர்தல்கள் நடந்து முடிந்த மொத்த பதவி யிடங்கள் / தலைமைப் பதவியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 656 | 656 | 656 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 6,570 | 6,570 | 6,570 |
| கிராம ஊராட்சித் தலைவர் | .. | 12,618 | 12,606 |
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | 40,879 | 97,458 | 97,383 |
| **மொத்தம்** | **48,105** | **1,17,302** | **1,17,215** |

நேரடித் தேர்தல்களுக்கான அனைத்து நடவடிக்கைகளும் 20.10.2006 அன்றுடன் முடிவு பெற்றது. இத்தேர்தல்களின் போது 55,484 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன.

மொத்தமுள்ள 1,17,302 பதவியிடங்களில் 1,17,215 பதவியிடங்களுக்குத் தேர்தல்கள் நடத்த முடிந்தன. மீதமுள்ள 87 இடங்களுக்கு, பிப்ரவரி, 2007ல் நடைபெற்ற தற்செயல் காலியிடங்களுக்கான தேர்தலின் போது தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

## 2.4 மறைமுகத் தேர்தல்கள் – 2006

மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணை தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணை தலைவர், மற்றும் கிராம ஊராட்சி துணை தலைவர் ஆகிய தலைமைப் பதவியிடங்கள் மறைமுகத் தேர்தல் மூலம் நிரப்பப்படுகிறது. சாதாரண நேரடித் தேர்தல்கள் முடிவுற்றவுடன் மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதன்படி 28.10.2006 அன்று மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட்டது.

**அட்டவணை 2.2**

**2006 ல் தலைமைப் பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட்ட விவரம்**

| தலைமைப் பதவியிடங்கள் | தேர்தல்கள் நடைபெற்ற மொத்த தலைமைப் பதவியிடங்களின் எண்ணிக்கை | தேர்தல்கள் நடந்து முடிந்த மொத்த தலைமைப் பதவியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சித் தலைவர் | 29 | 29 |
| மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் | 29 | 29 |
| ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் | 385 | 385 |
| ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் | 385 | 385 |
| கிராம ஊராட்சித் துணைத் தலைவர் | 12,618 | 12,618 |
| **மொத்தம்** | **13,446** | **13,446** |

## 2.4 தற்செயல் தேர்தல்கள்

### 2.6.1. நேரடித் தற்செயல் தேர்தல்கள்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தற்செயல் தேர்தல்களை நடத்தி வருகிறது. 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கீழ்க்கண்டவாறு மூன்று தற்செயல் தேர்தல்களை நடத்தியுள்ளது.

## அட்டவணை 2.3

**தற்செயல் தேர்தல்கள் நடைபெற்ற பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களின் எண்ணிக்கை**

| தேர்தல் நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் | கீழ்க்கண்ட நாள் வரை காலியிடங்கள் | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | கிராம ஊராட்சி தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பிப்ரவரி'07 | 31.12.2006 | 451 | 33 | 4 | 2 | 490 |
| செப்டம்பர்'07 | 31.07.2007 | 389 | 40 | 10 | 2 | 441 |
| பிப்ரவரி'08 | 31.12.2007 | 426 | 38 | 15 | 2 | 481 |

### 2.6.1. மறைமுக தற்செயல் தேர்தல்கள்

ஒவ்வொரு மாதமும் அவ்வப்போது ஏற்படும் தற்செயல் காலியிடங்களை நிரப்ப மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்படுகிறது. 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தற்செயல் தேர்தல்களின்படி நிரப்பப்பட்ட பதவியிடங்கள் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.4

**தற்செயல் தேர்தல் நடைபெற்ற தலைமைப் பதவியிடங்களின் எண்ணிக்கை**

| வ. எண் | வகைப்பாடு | நிரப்பப்பட்ட தலைமை பதவியிடங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | 2006-07 | 2007-08 |
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர் | .. | .. |
| 2. | மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் | .. | 1 |
| 3. | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் | 2 | 1 |
| 4. | ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் | .. | 4 |
| 5. | கிராம ஊராட்சித் துணைத் தலைவர் | 17 | 128 |

### 2.7. மாவட்ட திட்டக் குழு தேர்தல்கள், 2007

மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு இரண்டாவது சாதாரணத் தேர்தல்கள் 30.04.2007 அன்று நடைபெற்றது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதல் கூட்டம் 05.05.2007 அன்று நடைபெற்றது.

| | |
|---|---|
| ஊரகப் பகுதி | **160** பதவியிடங்கள் |
| நகரப் பகுதி | **92** பதவியிடங்கள் |

**<u>அட்டவணை 2.5</u>**

**<u>மாவட்ட திட்டக் குழுவிற்கான தற்செயல் தேர்தல்கள்</u>**

| மாவட்டம் | தேர்தல் நாள் | பகுதி | காலி பதவியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | 14.01.2008 | ஊரகப் பகுதி | 1 |
| திருவாரூர் | 14.01.2008 | ஊரகப் பகுதி | 1 |

### 2.8. பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தேர்தல்:

தமிழகத்தில் 1996ஆம் ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தாலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும், கிராம ஊராட்சித் தலைவருக்கான பதவிகள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டதற்கு எழுந்த எதிர்ப்பின் காரணமாக, தேர்தல்களை வெற்றிகரமாக நடத்த இயலவில்லை.

பாப்பாபட்டி கிராம ஊராட்சியில் அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் பதவிகளுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2002ல் நடத்தப்பட்ட தற்செயல் தேர்தலில் தலைவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பதவியேற்றவுடனேயே தலைவர் பதவியில் இருந்து விலகி விட்டார். அக்டோபர், 2002ல் தலைவருக்கான பதவிக்கு இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பிறகு வேட்பு மனுக்கள் திரும்ப பெறப்பட்டன. ஏப்ரல், 2003ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அக்டோபர், 2003ல் தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவியேற்றவுடனேயே அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி விட்டார். செப்டம்பர், 2004ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005–ல் இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் வேட்பாளர் ஒருவர் இறந்த காரணத்தினால் தேர்தல் நடைபெறவில்லை. 1996 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்தில் வார்டு உறுப்பினர் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

கீரிப்பட்டியில், அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை நடைபெற்ற தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல் 2002ல் நடைபெற்ற தற்செயல்

தேர்தலில், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பதவியேற்றவுடனேயே, தமது பதவியிலிருந்து விலகி விட்டார். அக்டோபர், 2002, ஏப்ரல், 2003 மற்றும் அக்டோபர், 2003ல் நடைபெற்ற தற்செயல் தேர்தல்களில் தலைவருக்கான பதவிக்கு மட்டும் வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. ஆனால் மனுக்கள் பிறகு திரும்பப் பெறப்பட்டன. செப்டம்பர், 2004ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005ல், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவியேற்பு நாளன்று அவர் பதவி விலகி விட்டார். 1996 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலங்களில் வார்டு உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நாட்டார்மங்கலத்தில் 25.12.1996 அன்று நடைபெற்ற தற்செயல் தேர்தலில், தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்டோபர் 2001 வரை 5 ஆண்டு காலம் பதவியில் தொடர்ந்து இருந்தனர். ஆனால் அக்டோபர், 2001ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும் மற்றும் அதற்கு பிறகு ஏப்ரல், 2005 வரை நடத்தப்பட்ட 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கு வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அக்டோபர், 1996ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும், அதனைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட தற்செயல் தேர்தல்களிலும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சியில் தலைவர் பதவிக்கும் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு இடங்களுக்கும் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், ஒதுக்கீடு செய்யப்படாத வார்டுகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்டோபர், 2001ல் நடைபெற்ற சாதாரண தேர்தலின்போதும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் பதவிக்கும் மற்றும் வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே தேர்தல்கள் நடைபெறவில்லை.

நீண்ட காலமாக, தீர்வு காண முடியாமலிருந்த பிரச்னைகளை இந்த அரசு தீர்வு செய்து, இந்த நான்கு ஊராட்சிகளிலும் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவிகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான தலைவர் பதவிகள் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி செய்யப்பட்டன. ஆனால், இந்த நான்கு ஊராட்சிகளைப் பொறுத்தவரை, சுழற்சி முறையை செயல்படுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முடிவு செய்தது. இந்த ஊராட்சிகளைச் சார்ந்த பல்வேறு சமூகத்தினர் தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து, புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை மனதார ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சிகளைச் சார்ந்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை சிறப்பிக்கும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் 13.11.2006 அன்று சமத்துவ பெருவிழா என்ற பெயரில் பாராட்டுவிழா நடைபெற்றது. இந்த கிராம ஊராட்சிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் சிறப்பு ஊக்குவிப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

# 3. உள்ளாட்சியில் மக்களாட்சி – அதிகாரப் பகிர்வு

# 3. உள்ளாட்சியில் மக்களாட்சி – அதிகாரப் பகிர்வு

## 3.1. உயர் நிலைக் குழுக்கள்

| ***உயர் நிலைக்குழுக்கள்*** | |
|---|---|
| · *எல்.சி. ஜெயின் குழு* | *– (1996)* |
| · *கோ.சி.மணி குழு* | *– (1997)* |
| · *மு.க. ஸ்டாலின் குழு* | *– (2007)* |

உள்ளாட்சி நிர்வாகம் என்பது இந்திய அரசமைப்பு சட்டத்தின் 7வது அட்டவணையில் பட்டியல்2 இனம் 5ன் படி மாநில அரசிற்கான பொருள் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஊரக உள்ளாட்சிகளுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 243ஜில் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின்படி, அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை மீறாமல், ஒவ்வொரு மாநிலமும், ஊராட்சி அமைப்புகள் சுயாட்சி அமைப்புகளாக விளங்குவதற்கு என்னென்ன பொறுப்புகளையும் அதிகாரங்களையும் வழங்க வேண்டுமோ, அவற்றை வழங்குவதற்கு மாநில சட்டப் பேரவையின் மூலம் சட்டம் இயற்றலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில் கூறப்படும் நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சி அமைப்புகளும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வரையறுத்து வழங்குவது குறித்து இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. மேலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை மேம்படுத்த திட்டம் தயாரித்தல் மற்றும் பதினோராவது அட்டவணையில் குறித்துள்ளபடி ஊராட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்க வேண்டிய 29 இனங்கள் குறித்த நடவடிக்கைகள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகள் வழங்குதல் ஆகியவை குறித்தும் இப்பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரமளித்தல் என்பது குறை அதிகார கோட்பாடு (Principle of subsidiarity) எனும் சீரிய தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டது. குறை அதிகார கோட்பாடானது, பொதுமக்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்த முடியாத அதிகாரங்கள் மட்டுமே மைய அதிகார அமைப்புகளால் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டது. மக்களாட்சித் தத்துவத்தில், மக்களிடமே இறுதி முடிவெடுக்கும் அதிகாரமும் உள்ளது என்ற அடிப்படையில், குறை அதிகார கோட்பாடு குடிமக்களை மையமாகக் கொண்டுள்ளது எனலாம். எனவே, மக்களாட்சியின் முக்கிய அங்கமான குடிமக்கள், நடைமுறையில் செயல்படுத்தக் கூடிய அளவு அதிகாரத்தை வைத்துக்கொண்டு, எஞ்சியுள்ள பணிகளை உள்ளாட்சி அமைப்புக்கள் மற்றும் மைய, மாநில அரசுகளுக்கு ஒப்பளிக்க வேண்டும். சுருங்கக் கூறின், மக்களாட்சி பரவலாக்கம் (Democratic Decentralization) என்பதே, குறை அதிகாரக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது தான்.

“உள்ளூர் மக்களாட்சி” (Local Democracy) மற்றும் “அதிகாரப் பரவலாக்கம்” என்ற வார்த்தைகள் ஒரே பொருள்படப் பயன்படுத்தப்பட்டாலும், தனித்தனிப் பொருள் கொண்டவை. பொறுப்புகளும் அதனை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களும் மக்களிடமல்லாது, குறிப்பிட்ட சாராரிடம் இருக்குமாயின், மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டத்திற்கு அதிகாரப் பரவலாக்கம் ஏற்படுவதால் மட்டுமே உள்ளாட்சி மக்களாட்சி மலர்ந்துவிடாது. எப்படி, ஒரு மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பில் (Centralised Structure) முடிவெடுக்கும் அதிகாரத்தில் பங்கேற்க

குடிமக்களுக்கு வாய்ப்பில்லையோ, அதுபோல, அதிகாரப்பரவலாக்கத்தினால் மட்டுமே குடிமக்கள் பங்கேற்பினை கொண்டுவர இயலாது. எனவே குடிமக்கள் அனைவரது நேரடி பங்கேற்பிற்கு வழிவகை செய்வதன் மூலமே அதிகாரம் மற்றும் பொறுப்புகளை உண்மையிலேயே பரவலாக்க முடியும்.

மேலே தெரிவிக்கப்பட்ட மக்களாட்சி பரவலாக்கல் கொள்கைகளின் அடிப்படையில், இந்த அரசு, கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை உள்ளபடியே பகிர்ந்தளித்திட முயன்றுள்ளது. அதிகாரப் பகிர்ந்தளிப்பு என்பது, ஒருமுறை நடந்து முடியும் நிகழ்வல்ல; அது ஒரு தொடர் நிகழ்வாகும். எனவே தான், இந்த அரசானது, மென்மேலும், அதிகாரங்களை பகிர்ந்தளித்திடும் நோக்கோடு கடந்த பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிர்வாக அமைப்புகளாக செயல்படவேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. **1996**ஆம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் முதன் முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக்குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு.எல்.சி.ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக முதல் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசுக்கு சமர்ப்பித்தது.

எல்.சி.ஜெயின் குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வண்ணம் செயல்வடிவம் அளிக்கப்பட்டது. கிராமப்புற மக்களோடு நேரடி தொடர்பு கொண்டுள்ள ஊரக வளர்ச்சி, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம், சமூக நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை பரிந்துரைக்கும் பொருட்டு, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த பதவியிலிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனுபவமிக்கவர்களை உள்ளடக்கிய இரண்டாவது உயர்நிலைக் குழுவை அரசாணை (நிலை) எண்.**320**, ஊரக வளர்ச்சி **(சி1)** துறை, நாள் **11.11.1997**ன் படி அப்போதைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் அரசு அமைத்தது. இக்குழு, **1,209** பரிந்துரைகளை **11.01.1999** அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. இவைகளில் **718** பரிந்துரைகளை ஏற்று அவற்றை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகளை அரசு வெளியிட்டது.

### 3.2. திரு. மு.க. ஸ்டாலின் தலைமையிலான உயர் நிலைக்குழு

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டும் என்ற இந்த அரசின் உறுதியினைத் தொடர்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் இப்பொருள் குறித்த சில வல்லுனர்களை உள்ளடக்கிய

மூன்றாவது உயர் நிலைக் குழு, அரசாணை நிலை எண். 6, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை, நாள் 22.01.2007ன்படி அமைக்கப்பட்டது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை ஆய்வு செய்து, இவ்வமைப்புகள் மேலும் திறம்பட செயலாற்ற ஏதுவாக கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரைகள் செய்திட இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது உயர்நிலைக்குழு, தனது பரிந்துரைகளை இறுதி செய்திடும் முன் தமிழ்நாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் அறிய முடிவு செய்தது. இது தொடர்பாக கீழ்க்கண்ட உத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

**(i)** **மாநில அளவிலான கருத்தரங்கு :** 18.03.2007 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் நகர்புற உள்ளாட்சித் தலைவர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 27 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், 363 ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில், உள்ளாட்சி அமைப்புகளில் திறமையான செயல்பாடுகளுக்குத் தேவையான பல அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

**(ii)** **கிராம ஊராட்சி தலைவர்களுக்கான மண்டல கருத்தரங்குகள் :** கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை மிக அதிகமானது (12,618) என்ற போதிலும் மிக அத்தியாவசியமான பொறுப்புகளை நிறைவேற்றும் அமைப்பாக அவை உள்ளபடியால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பான கருத்துக்களை பெறும் பொருட்டு கிராம ஊராட்சி மன்றத் தலைவர்களின் மண்டல கருத்தரங்குகள், ஈரோடு (24.07.2007), திருச்சி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007) மற்றும் விருதுநகர் (23.08.2007) ஆகிய இடங்களில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு ஊராட்சி நிர்வாகத்தில் உள்ள இடர்ப்பாடுகள் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்து கருத்துகள் கேட்கப்பட்டன. இம்மண்டல கருத்தரங்குகளில் தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களில் 11,984 கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம், பொறுப்புகள் மற்றும் கடமைகள் வழங்குவது குறித்து 47,108 பரிந்துரைகளை வழங்கினர்.

**(iii)** **உள் கூட்டங்கள்:** பல்வேறு அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான மாநில மற்றும் மண்டல கருத்தரங்குகளில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் குறித்து கலந்தாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

**(iv)** **உயர் அலுவலர்களுடன் கூட்டங்கள்:** ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக பலதுறை அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கூட்டங்களும் உயர்நிலைக்குழுத் தலைவரால் 11.10.2007 மற்றும் 12.10.2007 ஆகிய நாட்களில் நடத்தப்பபட்டன.

## 3.3. திரு மு.க. ஸ்டாலின் குழுவின் பரிந்துரைகள்

இக்குழு 39 பொருள்களின் கீழ் 99 பரிந்துரைகள் அடங்கிய தனது அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 10.12.2007 அன்று சமர்ப்பித்தது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றைக் கூடுதலாக வழங்கும் பொருட்டு தொலைநோக்குடன் இக்குழு தனது பரிந்துரைகளை வழங்கியது.

### 3.3.1. கிராம சபை

*மு.க. ஸ்டாலின் குழு 39 தலைப்புகளின் கீழ் 99 பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது*

கிராம சபையை ஒரு திறன் வாய்ந்த சமூகத் தணிக்கை அமைப்பாக மாற்றும் வகையில் வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கீழ்க்கண்ட பரிந்துரைகளை இக்குழு அளித்தது.

1. பல்வேறு துறைகள் மூலமாக செயல்படுத்தப்படும் தனிநபர் பயன் பெறும் திட்டங்களின் பயனாளிகளை கிராம ஊராட்சிகள் தேர்வு செய்து கிராம சபையின் தகவலுக்கு வைக்க ஆவன செய்திட வேண்டும்.

2. பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட வேண்டும். மேலும் இது குறித்து தேவையான நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்.

3. கிராம சபைக் கூட்டத்திற்கான செலவினம் ரூ.500/- ல் இருந்து ரூ.1,000/– ஆக உயர்த்திட வேண்டும்.

### 3.3.2. உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்தல்

4. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை மிக அதிக அளவில் உள்ளது. அத்துடன், கிராம ஊராட்சிகளின் மக்கட்தொகையும் 500க்கு கீழும் 25,000க்கு அதிகமாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் பல கிராம ஊராட்சிகளின் எல்லைகள் வருவாய் கிராமங்களின் எல்லைகளுக்கு இணையாக இல்லை. மேலும், ஊராட்சி ஒன்றியங்களின் பரப்பிலும், மக்கள் தொகையிலும் அதிக வேறுபாடுகள் உள்ளன. அத்துடன், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைத்தல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பாக அதிக அளவில் வேண்டுகோள்கள் அரசால் பெறப்பட்டுள்ளன. எனவே, உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறுவரையறை செய்வதற்கான தகுந்த வழிமுறைகளை கண்டறிவது அவசியமாகிறது.

5. வருவாய் கிராமங்களும் ஊராட்சி கிராமங்களும் இணையாக இருக்க வேண்டும் அல்லது ஒன்றில் மற்றொன்று முழுமையான எண்ணிக்கையை உள்ளடக்கியதாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இச்சீரமைப்பு நடவடிக்கைகள் 2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெறும் சாதாரணத் தேர்தலுக்கு முன் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

6. பல உறுப்பினர் வார்டு முறையை நீக்கி அதற்கு பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ளது போலவே கிராம ஊராட்சிகளிலும் ஒரு உறுப்பினர் உள்ள வார்டு முறையைக் கொண்டுவர வேண்டும். கிராம ஊராட்சிகளில் வார்டுகள் எண்ணிக்கையும், உறுப்பினர்கள் எண்ணிக்கையும் சமமாக இருக்கும் வகையில் மாற்றி அமைக்கலாம். அவ்வாறு மாற்றி அமைக்கும்போது ஒரு கிராம ஊராட்சியில் குறைந்தபட்சம் 3 வார்டுகள் மற்றும் அதே எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

### 3.3.3. உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் நிலையான பதவிக்காலம்

7. நியாயமற்ற காரணங்களுக்காகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள், திட்டமிடுதலையும், திட்டங்கள் செயலாக்கத்தையும் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் பொது நலனுக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான உரிமையை உறுப்பினர்கள் தக்கவைத்துக்கொள்ளும் அதே நேரத்தில் , அற்ப காரணங்களுக்காக அடிக்கடி கொண்டு வரப்படுவதைத் தவிர்ப்பது அவசியமாகிறது. எனவே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவதை கடுமையாக்குதல், நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரும் கால அளவை அதிகப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் இத்தகைய நிலையை தடுக்கலாம் என இக்குழு பரிந்துரைத்துள்ளது.

### 3.3.4. உள்ளாட்சிகள் தினம்

8. உள்ளாட்சி அமைப்புகள், மக்களுடன் மிக அதிகத் தொடர்பு கொண்டவைகளாகும். இந்தத் தொடர்பினை மேலும் வலுவூட்ட உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவு மறைவற்ற மற்றும் வெளிப்படையான நிலையினை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதே வேளையில் உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளை மக்கள் அறியச் செய்ய, திட்டங்கள் செயலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் குறித்த தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் வேண்டியுள்ளது. இதற்கென ஒரு ஆண்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தை ‘உள்ளாட்சிகள் தினம்’ என அறிவித்திட வேண்டும்.

### 3.3.5. வீட்டு வரி மறு நிர்ணயம்

9. வீட்டு வரி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அவசியம் மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒரு முறை வீட்டு வரி மறு நிர்ணயம் செய்வது குறித்து அரசு ஆணையிடவேண்டும்.

### 3.3.6. மாநில நிதி ஆணைய மானியம் வழங்குவதில் சமன்பாடு : நலிவுற்ற ஊராட்சிகளை வலுப்படுத்துதல்

10. மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வு, மக்கள் தொகையோடு தொடர்புடையதாக உள்ளதால், சிறிய கிராம ஊராட்சிகளுக்கு குறைவான மானியமும் கிடைக்கின்றது. ஒரு கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதி ஆணைய மானியம், அந்த ஊராட்சியின் பல்வேறு செலவினங்களுக்கு இணையாக இல்லாவிடினும், நிலையான செலவினங்களை ஈடுகட்டும் அளிவிற்காவது இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அதன் மக்கள் தொகையைக் கணக்கில் எடுக்காமல், குறைந்தபட்சம் ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதமுள்ள தொகை மட்டுமே மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

### 3.3.7. மத்திய நிதி ஆணைய மானியம்–கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல்

**11.** குடிநீர் வழங்கல் மற்றும் பராமரிப்பு, சுகாதாரம் மற்றும் தெருவிளக்குகள், கிராமச் சாலைகள், குளங்கள், சந்தைகள், நூலகங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் மிகப் பெரிய பொறுப்பு கிராம ஊராட்சிகளுக்கு உள்ளது. குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் ஆகியவைகளுக்கான செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக மத்திய நிதிஆணைய மானியம் முழுவதையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்.

### 3.3.8. ஒப்படைக்கப்பட்ட வருவாய்கள் : ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன் பெறும் வகையில் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல்

**12.** மாவட்ட அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை வசூலித்து சம்மந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதில் மிகுந்த காலதாமதமும், அதிக பணிப்பளுவும் இருந்தன. அத்துடன் சமச்சீரற்ற நிலையிலும் இருந்தது. மாவட்ட ஊராட்சிகளுக்கு இந்நிதியிலிருந்து எந்த பங்கும் கிடைப்பதில்லை. எனவே, ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை பகிர்ந்தளிக்கும் விதிமுறைகளை முறைப்படுத்தி உள்ளாட்சி அமைப்புகள் உரிய காலத்தில் நிதியினைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**13.** நிலவரியைத் தள்ளுபடி செய்யும் போது ஊராட்சிகளுக்கு ஏற்படும் இழப்பினை அரசு ஈடுசெய்ய வேண்டும்.

### 3.3.9. நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரத்தை உயர்த்துதல்

**14.** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அதிக எண்ணிக்கையிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் போது ஏற்படும் கால தாமதத்தை குறைக்கவும், அதிக நிதி பகிர்வு மற்றும் கட்டுமான பொருட்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டும், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் அளிக்கும் வண்ணம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகார வரம்பினை உயர்த்தி முறையே ரூ. 2 இலட்சம், ரூ.10 இலட்சம் மற்றும் ரூ. 20 லட்சம் ஆக நிர்ணயிக்க வேண்டும். இந்த உயர்வு, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் கூடுதல் நடைமுறை சுதந்திரத்துடன் செயல்பட வழிவகுக்கும்.

### 3.3.10. கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைபடுத்துதல்

**15.** ஊராட்சிக் கணக்குகளின் முறையினை ஒழுங்குமுறைபடுத்தும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகையினை தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள நிதியிலிருந்து செலுத்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் அதே வேளையில் அவசியமில்லாத பணிகளுக்கு நிதியினை செலவு செய்வதையும், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஒப்புதல் இல்லாமல் திட்ட நிதி/தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதி கணக்கில் இருந்து தொகையினை எடுப்பதையும் தடுத்தல் வேண்டும்.

### 3.3.11. அடையாள அட்டைகள்

**16.** ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்களது அலுவலக பணி தொடர்பாக பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. மேலும் அவர்கள் மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியிலும் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அவர்கள் அடையாள அட்டை வைத்திருப்பது அவசியமாகிறது.

### 3.3.12. வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிராம ஊராட்சிகள்) அதிகாரமளித்தல்

**17.** அனுபவம் வாய்ந்த மற்றும் முதுநிலை வட்டார வளர்ச்சி அலுவலர்களை, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)ஆக நியமனம் செய்யும் வகையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)ஐ தற்சார்பு ஊதியம் பெறும் அலுவலராக மாற்றிட வேண்டும்.

### 3.3.13. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாகனங்கள்

**18.** ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வட்டார ஊராட்சிகள்) ஆகியோர், பணிகளை மேலும் செம்மையாக கண்காணிக்க ஏதுவாக எரிபொருள் வரம்பு உயர்த்தப்பட வேண்டும்.

**19.** திட்டங்களை சிறப்பான முறையில் ஆய்வு செய்ய ஏதுவாக மாவட்ட ஊராட்சி தலைவருக்கு அளித்துள்ளதுபோல், ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவருக்கென தனியாக ஒரு வாகனமும் , இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் தனித்தனியே வாகனம் இருக்கும் வகையில் இன்னொரு வாகனமும் வழங்கப்பட வேண்டும்.

### 3.3.14. கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி

**20.** கிராம பொதுமக்களும், வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்களும், ஊராட்சித் தலைவர்களை எளிதில் தொடர்பு கொள்ள ஏதுவாக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தொலைபேசி வசதி ஏற்படுத்திட வேண்டும். இதன் வாயிலாக ஊடுவலை வசதியும் கிராம ஊராட்சிகள் பெற ஏதுவாகும்.

### 3.3.15. ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி

**21.** இயற்கைச் சீரழிவுக் காலங்களில் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் ஊரக வளர்ச்சிப் பணிகளை மேற்பார்வையிடவும், கண்காணிக்கவும், கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களின் வாகனங்களில் பொருத்தப்பட வேண்டும்.

### 3.3.16. கணினி வசதி

**22.** கிராம ஊராட்சிகளில் தற்போது முழுமையாக உபயோகப்படுத்தாமல் உள்ள கணினிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட வேண்டும்.

### 3.3.17. கைப்பம்பு, விசைப்பம்பு கொள்முதல் செய்தல் – கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல்

**23.** கைப்பம்பு மற்றும் குடிநீர் வசதியினை பராமரித்திட ஊராட்சித் தலைவர்களுக்கு தற்போது அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அலுவலர்களின் அனுமதியின்றி ஒரு குறிப்பிட்ட நிதி வரம்பிற்குள் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

### 3.3.18. தெரு விளக்குகள் கொள்முதல் செய்தல் – கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல்

**24.** தெருவிளக்குகளை தொடர்ந்து முறையாக பராமரிக்க ஊராட்சிகளுக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று **1998** ஆம் ஆண்டு அரசு எடுத்த முடிவு எதிர்காலத்திலும் தொடர வேண்டும்.

### 3.3.19. ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான பயிற்சி

**25.** தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் குறித்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் (RIRD) மூலம் காலமுறைப்படி பயிற்சி அளித்திட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு தரமான பயிற்சி அளிப்பதை உறுதி செய்ய ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களும் மேம்படுத்தப்பட வேண்டும்.

### 3.3.20. நீர்வளத்தைப் பாதுகாத்தல்

**26.** அனைத்து சிறுபாசன கண்மாய்களையும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் மூலம் புனரமைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகள் வசம் உள்ள சிறுபாசனக் கண்மாய்கள் மற்றும் நீர்நிலை புறம்போக்குகளை வேறு நோக்கங்களுக்காக உரிமை மாற்றம் செய்யக்கூடாது.

### 3.3.21. ஊரகச் சாலைப் பணிகள்

**27.** ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு சொந்தமான சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக நிலை உயர்த்தி உரிய வழிமுறைகளின்படி நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றும்வரை நெடுஞ்சாலைத் துறையின் ஊரக சாலைப் பிரிவு இச்சாலைகளை மேம்பாடு செய்வதற்காக எடுக்கக் கூடாது.

### 3.3.22. முன்னாள் மாவட்ட போர்டுகளுக்கு சொந்தமான சொத்துக்களை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து திரும்ப பெறுதல்

**28.** தற்போது நெடுஞ்சாலைத் துறையிடம் உள்ள முன்னாள் மாவட்ட போர்டுகளின் சொத்துக்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 3.3.23. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் நிறைவேற்றுதலை கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமை ஆக்குதல்

**29.** தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முழுமனதுடனும், கடமை உணர்வுடனும் கிராம ஊராட்சித் தலைவர்கள் செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தலை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 110ன் கீழ் ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும்.

### 3.3.24. நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல்

**30.** உள்ளூர் மக்கள் தங்கள் பகுதிக்குத் தேவையான பணிகளை கண்டறிந்து அப்பணிகளுக்கு முழு அல்லது பகுதி பங்களிப்பின் மூலமாகவும் சுய ஈடுபாட்டுடனும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டம் மீண்டும் கொண்டுவருதல் வேண்டும்.

### 3.3.25. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் புனரமைப்பு

**31.** தமிழ்நாட்டில் சுமார் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 5,500 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் உள்ளன. இவைகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம், கரும்பலகைத் திட்டம், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் இப்பள்ளிகளில் புதுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால், காலப்போக்கில் போதிய பராமரிப்பின்மை காரணமாக பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. எனவே, ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் பழுது பார்க்கவும், புனரமைக்கவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி அதிகாரம் வழங்கிட வேண்டும்.

### 3.3.26. அனைத்து கிராமங்களுக்கும் நூலகங்கள்

**32.** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நூலகங்களுக்கு உள்ளூரில் வசிக்கக்கூடிய, பணியிலிருந்து ஓய்வு பெற்ற, புத்தக ஆர்வமுள்ள நூலகர்களை நியமனம் செய்ய கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

### 3.3.27. அனைத்து கிராமங்களிலும் விளையாட்டு மையங்கள்

**33.** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சிகளில் விளையாட்டு மையங்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் விளையாட்டு மையங்களைப் பராமரித்திடவும், பராமரிப்பு செலவினம் மேற்கொள்ளவும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

### 3.3.28. சுகாதாரம்

34. புறநகரில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகள் திடக்கழிவுகள் மற்றும் கழிவுநீரை அகற்றும் பணிகளை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் இக்கிராம ஊராட்சிகளை இணைத்து ஒரு தொகுப்பாக அமைத்திட வேண்டும். மற்ற அருகாமையிலுள்ள ஊரக அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்தும் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

### 3.3.29. நலவாழ்வு

35. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், மேற்பார்வையிடவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

36. வட்டார மருத்துவ அலுவலர், ஒவ்வொரு மாதத்தின் இறுதி செவ்வாய் அன்று சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்க வேண்டும்.

37. சிக்குன்குனியா போன்ற நோய்களைத் தடுக்கவும் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் ஒதுக்கப்படும் நிதியினை கிராம ஊராட்சிகள் மூலமாக கிராமத்தில் செலவினம் மேற்கொள்ள சுகாதாரத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில் இவை நடைபெறலாம்.

38. தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கான அனைத்துப் பயனாளிகளையும் கிராம ஊராட்சிகளே பரிந்துரைக்க வேண்டும். தகுதியின் அடிப்படையில் சுகாதாரத்துறை அலுவலர்கள் பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

39. சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் துறையின் மூலம் தனியாக கிராம அளவிலான குழுக்கள் அமைப்பதைத் தவிர்த்து, கிராம ஊராட்சியே கிராம அளவிலான குழுவாக செயல்பட அனுமதிக்க வேண்டும்.

### 3.3.30. சமூக நலம்

40. கிராம ஊராட்சிப்பகுதிகளில் செயல்படும் சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட மையங்களின் செயல்பாடுகளை மேற் பார்வையிடுவதற்கு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

41. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டதுறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களிலும் பயன்பெறும் பயனாளிகளின் பட்டியலை கிராம ஊராட்சி பரிந்துரை செய்ய அதிகாரமளிக்கப்பட வேண்டும். சமூக நலத் துறை அலுவலர்கள் பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகள் விதிமுறைகளின்படி தகுதியானவர்களா என்பதை மட்டும் ஆய்வு செய்வர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் கிராம சபையில் தகவலுக்காக வைக்கப்பட வேண்டும்.

42. சமூக நலம் மற்றும் ஊட்டச் சத்துத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனாதை இல்லங்கள், குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் மற்றும் முதியோர் இல்லங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவருக்கு வழங்கப்பட வேண்டும்.

43. கிராம அளவில் சமூக நலத் துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே அத்தகைய குழுவாக செயல்படவேண்டும்.

44. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்மூலம் செயல்படும் பல்வேறு தனி நபர் பயன்பெறும் திட்டங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மாவட்ட அளவில் பண அஞ்சல் மூலம் தற்போது அனுப்பும் நடைமுறைக்குப் பதிலாக கிராம ஊராட்சிகள் மூலமாகவே வழங்கலாம்.

45. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலம் செயல்படுத்தப்படும் தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகளை கிராம ஊராட்சியே பரிந்துரை செய்ய வேண்டும். இப்பட்டியல் கிராம சபையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும்.

46. சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் தனிநபர் பயன்பெறும் திட்டங்களை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தலாம்.

### 3.3.31. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

47. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளை ஆய்வு செய்து கண்காணிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

48. தாட்கோ செயல்படுத்தும் தனிநபர் பயன் பெறும் திட்டப் பயனாளிகளைத் தேர்வு செய்வதில் தாட்கோ நிர்ணயித்துள்ள விதிமுறைகள் அடிப்படையில் பயனாளிகளின் பட்டியலை பரிந்துரைக்க கிராம ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். கிராம ஊராட்சியின் பரிந்துரையின் அடிப்படையிலும், பயனாளிகளின் தகுதியின் அடிப்படையிலும் தாட்கோ பயனாளிகளை தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபையின் தகவலுக்காகவும், பின்னேற்புக்காகவும் வைக்கப்பட வேண்டும்.

49. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்க தகுதியான பயனாளிகளின் பெயர்களை கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்ய அதிகாரமளிக்க வேண்டும்.

50. தீண்டாமை குறைப்பது தொடர்பாக முன்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஆதி திராவிடர் நலத் துறையால் வழங்கப்படும் ஊக்கத் தொகையினைச் செலவு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

51. விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு நடவடிக்கையினை தொடர்புடைய கிராம ஊராட்சிகள் மேற்பார்வையிட வேண்டும்.

52. கிராம அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய திட்டங்களுக்கான குழுவாக செயல்பட வேண்டும்.

### 3.3.32. மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலம்

**53.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையைச் சார்ந்த பள்ளிகள் மற்றும் விடுதிகளை கண்காணிக்கும் அதிகாரம் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கலாம்.

**54.** இத்துறையால் செயல்படுத்தப்படும் தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகளைப் பரிந்துரை செய்யும் அதிகாரம் கிராம ஊாட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். இப்பட்டியலிலிருந்து தகுதியின் அடிப்படையில் பயனாளிகளை துறை தேர்வு செய்யும்.

**55.** இத்துறை மூலம் பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா வழங்க இடம் தேர்வு செய்யும் பணியினை கிராம ஊராட்சியுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளலாம்.

**56.** கிராம அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக செயல்பட வேண்டும்.

### 3.3.33. கல்வி

**57.** தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளைக் கண்காணிக்கும் அதிகாரம் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு வழங்கப்பட வேண்டும்.

**58.** கிராமங்களிலுள்ள வயது வந்தோர் மற்றும் முறை சாராக் கல்வி மையங்களைக் கண்காணிக்கும் அதிகாரம், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவருக்கு வழங்கப்படவேண்டும்.

**59.** அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் அமைக்கப்படும் கிராம கல்விக்குழு கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் கல்வித்துறையால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் ஆகியோரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**60.** கிராம அளவில் பள்ளிக் கல்வித் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக செயல்படலாம்.

**61.** கிராம ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், அவரவர் கிராம ஊராட்சி பகுதியில் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் பதவி வழி உறுப்பினர்களாக சேர்க்கப்படலாம்.

**62.** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான பராமரிப்பு பணி ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு ஆதலால் புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களுக்கான பராமரிப்புப் பணிகள் ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். எனினும், மின் வசதியுள்ள பள்ளிகளுக்கான மின்சாரக் கட்டணத்தை ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதிச்சுமையை குறைக்க ஏதுவாக பெற்றோர் ஆசிரியர் கழகம் அல்லது பள்ளிக் கல்வித் துறையே செலுத்த வேண்டும்.

**63.** பள்ளிக் கட்டடங்களைப் பழுதுநீக்கம் செய்யவும், புனரமைக்கவும் அரசு ஒரு புதிய திட்டத்தினை உருவாக்கி அதற்குத் தேவையான நிதியினையும் ஒதுக்க வேண்டும்.

**64.** முறைசாராக் கல்வித் திட்டங்களுக்கான வட்டார மற்றும் மாவட்டக் குழுக்களில் கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

### 3.3.34. பொது விநியோகம்

**65.** கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்ட நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்ய ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

**66.** நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்து காலாண்டுக்கு ஒரு முறை வட்ட வழங்கல் அலுவலர் ஆய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர்கள் தங்கள் ஆய்வின் போது கண்டறிந்தவைகளையும் பொது விநியோகத் திட்டத்தினை மேம்படுத்த ஆலோசனைகளையும் தெரிவித்திட இக்கூட்டத்திற்கு அழைத்திட வேண்டும்.

**67.** தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளால் ஒப்பளிக்கப்பட்ட பயிர் கடன் விவரங்கள் மற்றும் பயனாளிகளின் பட்டியல் காலாண்டுக்கு ஒருமுறை கிராம சபைக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும்.

**68.** பொது விநியோகத் திட்டத்திற்கான 'அ' பதிவேடு நாளது தேதிவரை சேர்த்தல் மற்றும் நீக்கல் போன்ற விவரங்களுடன் ஒவ்வொரு ஆண்டும் கிராம சபையில் வைத்திட வேண்டும்.

**69.** கிராம அளவில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக செயல்படும்.

**70.** சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கிராம ஊராட்சித் தலைவரை பதவி வழி உறுப்பினராக நியமிக்கலாம்.

### 3.3.35. தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பிரச்சினைகள்

**71.** ஊரக உள்ளாட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் மின் இணைப்புகளுக்கான கட்டண விகிதம் ஒரு யூனிட்டுக்கு ரூ.3.40 லிருந்து ரூ.3 ஆக குறைத்திட வேண்டும்.

**72.** தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் 45 நாட்களுக்கு மேல் செலுத்தாமல் நிலுவையிலுள்ள மின் கட்டணத் தொகைக்கு அளிக்கப்படும் வட்டி விகிதம் தற்போதைய 12 சதவீதத்திலிருந்து குறைத்திட வேண்டும். மின் கட்டணத்தை செலுத்துவதற்கான கால அளவை தற்போதைய 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்திட வேண்டும்.

**73.** கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவையாக உள்ள அபராத வட்டியினை தள்ளுபடி செய்திட வேண்டும்.

74. ஊரக உள்ளாட்சிகள் புதிய தெருவிளக்குகளை அமைப்பதில் காலதாமதத்தையும், கூடுதல் செலவினத்தையும் தவிர்க்கும் பொருட்டு மின்கம்பம் நடுவதற்கான நிலையான நிர்மான கட்டணத்தை கடைபிடிக்க வேண்டும்.

75. ஒவ்வொரு மின் இணைப்புக்கும் மீட்டர் அட்டையை தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்க வேண்டும். மாவட்ட அலுவலர்கள் நிலுவைத் தொகை செலுத்திய மின் கட்டண அட்டையில் மின் கட்டண இணைப்புகளுக்கு நிலுவைத் தொகை இல்லை என்ற சான்றிதழை தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்கள் வழங்க வேண்டும். இதனால் கிராம ஊராட்சித் தலைவர்கள் நிலுவையின்றி எதிர்காலத்தில் மின் கட்டணத்தை செலுத்த இயலும்.

76. மின்சார வரியம், எதிர்காலத்தில், ஆரம்ப மற்றும் இறுதி மீட்டர் அளவின் அடிப்படையில் மின்கட்டணப் பட்டியலை கண்டிப்பாக அனுப்ப வேண்டும்.

77. மின் வசதி இல்லாத குக்கிராமங்கள்/ வீடுகளைக் கண்டறிந்து அதனை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்குமாறு கிராம ஊராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம், இராஜிவ் காந்தி கிராமின் வித்யூதிகரன் யோஜனா (RGGVY) திட்டத்தின் கீழ் உள்ள நிதியிலிருந்து இந்தப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

78. ஒருங்கிணைந்த காற்றாலைப் பண்ணைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆராய வேண்டும். இது போன்ற நிகழ்வுகளில் கிராம ஊராட்சிகள் ஒருங்கிணைந்த காற்றாலைப் பண்ணைகளை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி புரிதல் வேண்டும். தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு ஊரக உள்ளாட்சிகளுக்கு விதிக்கப்படும் அதே கட்டண விகிதத்தில் மின்சாரத்தை விற்பதற்கு ஊரக உள்ளாட்சிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

79. கிராம ஊராட்சிகளில் தெருவிளக்குகளைப் பராமரிப்பதற்கு போதுமான அளவில் களப்பணியாளர்களைப் பணிநியமனம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

80. மின் விளக்குகள் மற்றும் இதர மின் சாதனங்களை மாற்றிப் பொருத்துவதற்கு தமிழ்நாடு மின்சாரவாரியப் பணியாளர்களுக்கு வழங்கும் உழைப்பூதியத்தை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் உயர்த்தி வழங்க வேண்டும். இதன் மூலம் பணியாளர்கள் போதிய ஆர்வத்துடன் பணியினை மேற்கொள்ள வாய்ப்பேற்படும்.

81. எரிசக்தித் துறைத் திட்டங்களுக்கென தனியாக கிராம அளவிலான குழுக்களை அமைப்பதற்குப் பதிலாக கிராம ஊராட்சியே, இதுபோன்ற அனைத்துத் திட்டங்களுக்கும் கிராம அளவிலான குழுவாக செயல்படலாம்.

### 3.3.36. வேளாண்மை

82. வேளாண்மைத் துறை செயல்படுத்தும் அனைத்து தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகளை பரிந்துரை செய்வதற்கு கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். இப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டும், தகுதி அடிப்படையிலும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் இறுதிப்பட்டியலை முடிவு செய்வர்.

**83.** தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் நிலங்களிலும் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இதற்கென கிராம அளவிலான குழுவை தனியாக அமைப்பதற்கு பதிலாக இத்திட்டத்தினை கிராம ஊராட்சி மூலமே செயல்படுத்தலாம்.

**84.** வேளாண்மைத் துறைக்கு கிராம அளவிலான குழுவை தனியே அமைப்பதற்கு பதிலாக கிராம ஊராட்சிகளே அனைத்துத் திட்டங்களுக்கும் கிராம அளவிலான குழுவாக செயல்பட வேண்டும்.

### 3.3.37. கால்நடை பராமரிப்பு

**85.** கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் உள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை கிளை நிலையங்கள், பார்வை மையங்கள் மற்றும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பாட்டினை ஆய்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சித்ததலைவர்களுக்கு வழங்க வேண்டும்.

**86.** உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) காலாண்டிற்கு ஒரு முறை சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை உதவியாளர்கள் ஆய்வுக்கூட்டத்தை ஒவ்வொரு காலாண்டும் ஊராட்சி மன்றத் தலைவர்களுடன் நடத்த வேண்டும். இத்தகைய காலாண்டு கூட்டங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் குறைகளை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**87.** கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குப் பரவும் நோய்களை தடுப்பதில் கிராம ஊராட்சிகள் தங்கள் முழு ஒத்துழைப்பினை கால்நடை பராமரிப்புத் துறைக்கு நல்க வேண்டும். அதே நேரத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை, தகவல், தொடர்பு மற்றும் கல்விக்கான நிதியினைத் துறையின் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் கிராம ஊராட்சிகள் மூலமாக கிராமங்களுக்கு வழங்க வேண்டும்.

**88.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்குதல் மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்கத் தேவையான கடன் விண்ணப்பங்களை தொடர்புடைய பால் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோழிப்பண்ணை கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைப்பதில் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

**89.** அரசாணை (நிலை) எண். 166, கால்நடை பராமரிப்பு(காப.2) துறை, நாள் 27.07.1997ல் கிராம ஊராட்சிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள மீன்பாசி குத்தகை உரிமைகளை மீண்டும் வலியுறுத்தி கிராம ஊராட்சிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**90.** மேய்ச்சல் மற்றும் மந்தைவெளி புறம்போக்கு நிலங்களில் கால்நடை தீவனம் வளர்ப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறைகள் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**91.** கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறையின் திட்டங்களுக்குத் தனித்தனியே கிராம அளவிலான குழுக்களை அமைப்பதற்கு பதிலாக கிராம ஊராட்சியே அனைத்துத் திட்டங்களுக்கும் கிராம அளவிலான குழுவாக செயல்படலாம்.

### 3.3.38. பொதுப்பணித் துறை

**92.** பொதுப்பணித் துறை ஏரிகளில் மீன்பாசி குத்தகை ஏலத்தின் மூலம் கிடைக்கும் வருவாயில் 70 சதவீதத்தினை கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கலாம்.

### 3.3.39. வருவாய்த் துறை

**93.** கிராம நிர்வாக அலுவலரால் ஒவ்வொரு மாதமும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் நகலினை ஒவ்வொருமாத பதிவு விபரத்துடன் கிராம ஊராட்சிக்கு வழங்கலாம். அத்துடன், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி மன்றம் ஆகிய இருவரும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரம் வழங்கலாம்.

**94.** இருப்பிடச் சான்று, குடியிருப்புரிமைச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் அதிகாரம், தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர்களிடம் இருக்க வேண்டும்.

**95.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் தயாரிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் பட்டியலை, இதர துறைகளின் பல்வேறு திட்டங்களின் வரையறைக்கேற்ப, வருவாய்த் துறையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும் இணைந்து பயன்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**96.** முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், கைவிடப்பட்ட பெண்கள், அனாதைகள், விவசாயத் தொழிலாளர் ஆகிய ஓய்வூதியத்தொகை பெறுவோர் பட்டியலை கிராம சபையில் வைக்க வேண்டும். தகுதி வாய்ந்தவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளதா எனவும் தகுதி இல்லாதவர்களின் பெயர்கள் ஏதேனும் சேர்க்கப்பட்டுள்ளதா எனவும் கிராம சபை சரிபார்க்க வேண்டும். சரிபார்த்த பிறகு தகுதி இல்லாத நபர்களின் பெயர்களை நீக்குவதற்கும், தகுதியுள்ள நபர்களின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்ப்பதற்கும் கிராம சபை பதிவு செய்ய வேண்டும். கிராம சபையின் பரிந்துரையை தகுதியின் அடிப்படையில் வருவாய்த் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**97.** வீட்டு மனைப்பட்டா, இரண்டு ஏக்கர் தரிசு நில விநியோகத் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் வருவாய்த்துறையால் தயாரிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் கிராம சபைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற வேண்டும்.

**98.** ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களின் விவரத்தை அளவைச் சுவடி வரைபடத்துடன் (FMB) வருவாய்த் துறை மாவட்டத்திலுள்ள தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு விரைவில் அளிக்க வேண்டும்.

**99.** வருவாய்த் துறைத் திட்டங்களுக்கென தனியாக கிராம அளவிலான குழுக்கள் அமைப்பதற்கு பதிலாக, கிராம ஊராட்சியே இந்த திட்டங்களுக்கு கிராம ஊராட்சிக் குழுவாக செயல்படலாம்.

## 3.4. திரு மு.க. ஸ்டாலின் குழு பரிந்துரைகளின் மீது வெளியிடப்பட்ட அரசு ஆணைகள்

இக் குழுவால் அளிக்கப்பட்ட இடைக்கால பரிந்துரைகளுடன் கூடிய 99 பரிந்துரைகளில், இதுவரை 61 பரிந்துரைகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு பிறப்பித்துள்ள ஆணை விபரங்கள் பின்வருமாறு :

### *(i) கிராம சபை*

1. கிராம சபையினை சமூகத் தணிக்கைக்கான வலுவுள்ள அமைப்பாக மாற்றுவதற்கு ஏதுவாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் தனி நபர் பயன்பெறும் திட்டங்களின் கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுத்து, அவ்விவரங்களை கிராம சபையில் தகவலுக்காகவும், ஒப்புதலுக்கும் வைத்திட உயர்நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அரசாணை எண்.148, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26.12.2007ல் தாட்கோ செயல்படுத்தும் தனிநபர் திட்டங்களில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் பட்டியலை கிராம சபைக்கு தெரியப்படுத்த வேண்டுமென உத்திரவிட்டுள்ளது. மேலும் அரசாணை (3டி) எண். 4, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (F1) துறை, நாள் 31.01.2008ல் இதே போன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசின் பிற துறைகளும், காலப்போக்கில் இது போன்ற ஆணைகளை வெளியிடும்.

2. பல்வேறு துறைகள் செயல்படுத்தும் அனைத்துத் திட்டங்களையும் சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட வேண்டும் என உயர்நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் பணிகளை கிராம சபை சமூகத் தணிக்கை செய்கிறது. 15.08.2007, 2.10.2007 மற்றும் 26.01.2008 ஆகிய நாட்களில் நடைபெற்ற கிராம சபை கூட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்த சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட்டு வருகிறது.

இக்குழுவின் பரிந்துரையின்படி, அரசாணை எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1) துறை, நாள்: 30.09.2008ல் கிராம ஊராட்சித் தலைவர்கள் ஒரு கிராம சபைக் கூட்டத்திற்கு ரூ.1,000/- வரை செலவு செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### *(ii) ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்தல்*

வருவாய் கிராமங்களும் ஊராட்சி கிராமங்களும் இணையாக இருக்க வேண்டும் அல்லது ஒன்றில் மற்றொன்று முழுமையான எண்ணிக்கையை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்ற கருத்தினை உயர்நிலைக் குழு குறிப்பிட்டுள்ளது. இத்தருணத்தில் இத்தகைய ஒருங்கிணைப்பு பல ஆயிரக் கணக்கான கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை பாதிக்கும் என்பதால், அடுத்த 2011 அக்டோபர் மாதத்தில் நடைபெறும் சாதாரணத் தேர்தல்களுக்கு முன்னராவது, இச்சீரமைப்பைக் கொண்டு வரவேண்டுமென குழு பரிந்துரைத்துள்ளது.

மறுசீரமைப்புக்கான பரிந்துரையை அரசுக்கு அனுப்புமுன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/ துறைத் தலைவர்கள், பொதுமக்களின் கருத்துக்களை கேட்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து அரசாணை நிலை எண்.131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி1) துறை, நாள் 16.03.2007–ல் ஆணையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்த வேண்டிய இரண்டு கருத்தறியும் கூட்டங்கள் குறித்தும், தேவைப்படின் துறைத் தலைவர்கள் தலைமையிலான மூன்றாவது கூட்டம் குறித்தும் இவ்வரசாணையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

பல உறுப்பினர் வார்டு முறையை நீக்கி அதற்கு பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ளது போலவே கிராம ஊராட்சிகளிலும் ஒரு உறுப்பினர் வார்டு முறையைக் கொண்டுவர வேண்டுமென்ற உயர்நிலைக்குழுவின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து வருகிறது. இத்தருணத்தில் இது குறித்து வெளியிடப்படும் எந்த ஒரு ஆணையும் ஆயிரக் கணக்கான கிராம ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலத்தை பாதிக்கும் என்பதால், அடுத்த 2011, அக்டோபர் மாதத்தில் நடைபெறும் சாதாரணத் தேர்தல்களுக்கு முன்னர் இதற்கான ஆணையிடுதல் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

***(iii) உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் நிலையான பதவிக்காலம்***

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுகின்ற வழிமுறைகளை கடுமையாக்குவதற்கும் மற்றும் ஒரே நபருக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாதத் தீர்மானம் கொண்டுவரும் கால அளவை உயர்த்த வேண்டுமென்ற உயர்நிலைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 2007ஆம் ஆண்டு சட்டத்திருத்தம் எண்.9 மற்றும் இதன் தொடர்ச்சியாக வெளியிடபட்ட 2008ஆம் ஆண்டு சட்டத்திருத்தம் எண்.10ன் வாயிலாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 211 மற்றும் 212ல் உரிய திருத்தங்களை அரசு கொண்டு வந்துள்ளது.

அதன்படி, தொடர்புடைய கிராம ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதி என்பதை குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சித் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு எதிராக அவர் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ எந்த ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வர இயலாது என வரையறுக்கப்பட்டுள்ளது.

***(iv) உள்ளாட்சிகள் தினம்***

இக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு ஆணை (நிலை) எண்.632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (சி1) துறை, நாள் 26.10.2007ல், நவம்பர் 1ஆம் தேதியினை ‘உள்ளாட்சிகள் தினமாக’ அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் கொண்டாடுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

### *(v) மாநில நிதி ஆணைய மானியம் வழங்குவதில் சமன்பாடு : நலிவுற்ற ஊராட்சிகளை வலுப்படுத்துதல்*

தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளின் மக்கட் தொகை, 500க்கும் குறைவானதாகவும் 25,000க்கும் அதிகமாகவும் உள்ளதாலும், மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வு மக்கள் தொகையோடு தொடர்புடையதாக உள்ளதாலும், சிறிய கிராம ஊராட்சிகளுக்கு குறைவான மானியமும் பெரிய ஊராட்சிகளுக்கு அதிக மானியமும் கிடைக்கின்றன. பெரிய ஊராட்சிகளின் தேவைகள் அதிகம் இருப்பினும், அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிகளை நிர்வகிப்பதற்கு அவைகளின் பரப்பளவுக்கு தொடர்பில்லாத சில நிலையான செலவினங்கள் உள்ளன. எனவே, ஒரு கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதி ஆணைய மானியமானது அந்த ஊராட்சியின் குறைந்த பட்சம் நிலையான செலவினங்களை ஈடுகட்டும் அளவிற்காவது இருக்க வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அவைகளின் மக்கள் தொகைக்குத் தொடர்பில்லாமல் குறைந்தபட்சம் ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமெனவும், மீதமுள்ள தொகை மட்டுமே மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் உயர்நிலைக்குழு கருதியது. இதுகுறித்த இடைக்கால கலந்தாய்வின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 199, நிதி (நிதி ஆணையம்–IV) துறை, நாள் 25.05.2007ல் ஒவ்வொரு ஊராட்சிக்கும் சமச்சீர் அடிப்படையில் குறைந்தபட்சமாக ரூ.3 இலட்சம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

### *(vi) மத்திய நிதி ஆணைய மானியம் – கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல்*

தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் பராமரிப்பு, சுகாதாரம் மற்றும் தெருவிளக்குகள், கிராமச் சாலைகள், குளங்கள், சந்தைகள், நூலகங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் மிகப் பெரிய பொறுப்பு கிராம ஊராட்சிகளுக்கு உள்ளதால் மத்திய நிதி ஆணைய மானியம் முழுமையும் கிராம ஊராட்சிகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற உயர் நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.19, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 2) துறை, நாள் 26.02.2007ல், மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. கிராம ஊராட்சிகள், மத்திய நிதி ஆணைய மானியம் முழுமையும் குடிநீர், தெருவிளக்கு மற்றும் சுகாதார பராமரிப்பு செலவினங்களுக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

### *(vii) ஒப்படைக்கப்பட்ட வருவாய் : ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன் பெறும் வகையில் விதிமுறையினை சீரமைத்தல்*

உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒப்படைக்கப்பட்ட வருவாய் என்பது, கேளிக்கை வரிகள் சட்டம், 1939ன் கீழ் கேளிக்கை வரி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன்கீழ் முத்திரைத் தாள் மீதான மிகு வரி, தலவரி மற்றும் தல மேல்வரி போன்ற வரி மற்றும் வரிவிதிப்புகள் அரசால் வசூலிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படும். வணிக வரித்துறையால் கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டு காலாண்டுக்கொரு முறை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக ஈடு செய்யப்படும். சொத்து மாற்றம் செய்யும் போது கிடைக்கப்பெறும் முத்திரைத் தாள் கட்டணம் மற்றும் முத்திரைத் தாள் கட்டணம் மீதான மிகு வரி ஆகியவை பதிவுத்துறையால்

வசூலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு காலாண்டுக்கு ஒரு முறை நேரடியாக ஈடு செய்யப்படும். வருவாய்த் துறையில் வசூலிக்கப்படும் நில வருவாய், அதனுடன் வசூலிக்கப்படும் தல வரி மற்றும் தல மேல் வரி ஆகியவை ஜமாபந்தி முடிவடைந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவரால் நேரடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஈடு செய்யப்பட்டது. மாவட்ட அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயினை வசூலித்து சம்மந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்வதில் தற்போது உள்ள நடைமுறையில் ஏராளமான காலதாமதமும், தேவையில்லாத வேலைப்பளுவும் இருந்தன. மேலும், இவ்வகையிலான பகிர்மானமும் சமச்சீரற்ற நிலையில் இருந்தன. இதில் மாவட்ட ஊராட்சிகளுக்கு எந்த பங்கும் கிடைப்பதில்லை. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வருவாயை காலதாமதமின்றி பகிர்மானம் செய்யும் வகையில் தற்போதைய நடைமுறையை மாற்றியமைக்க வேண்டுமென உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது.

அதன்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சேர வேண்டிய தல வரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் மீதான மிகு வரி, கேளிக்கை வரி இவைகளிலிருந்து பெறப்படும் வருவாய் அனைத்தும் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்படவேண்டும் என்றும் அதில் மூன்றில் இரண்டு பங்கு நிதியினை காலாண்டு அடிப்படையில் மாநில நிதி ஆணையத்தால் கூறப்பட்டுள்ள வழி'முறைகளின் படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரே பிரித்து வழங்கலாம் எனவும் அரசாணை எண்.168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 04.10.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது. இதில் மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியினை அரையாண்டு அடிப்படையில் அதற்கென உள்ள திட்ட நிதியில் வரவு வைக்கவும், மேற்படி நிதியினை சில குறிப்பிட்ட திட்டங்களை ஊரகப் பகுதிகளில் செயல்படுத்த பயன்படுத்தவும் ஆணையிட்டுள்ளது.

### *(viii) நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரத்தை உயர்த்துதல்*

1998ல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவை, முறையே ரூ.1 லட்சம், ரூ.5 லட்சம் மற்றும் ரூ.10 லட்சம் மதிப்பீடு வரை, பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு தாமே நிர்வாக அனுமதி வழங்க அரசு அதிகாரம் அளித்திருந்தது. அதற்கு மேற்பட்ட மதிப்பீட்டில் பணிகள் தேர்வு செய்யப்படும் பட்சத்தில் மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்வாக அனுமதிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்/ஊரக வளர்ச்சி இயக்குநர்/அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பி நிர்வாக அனுமதி பெற வேண்டும்.

தேவையற்ற காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கிலும், அதிக நிதி பகிர்வு மற்றும் கட்டுமான பொருட்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டும், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் அளிக்கும் வண்ணம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரத்தை உயர்த்தி முறையே ரூ. 2 இலட்சம், ரூ.10 இலட்சம் மற்றும் ரூ. 20 இலட்சம் ஆக உயர்த்துவதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் அதிக சுதந்திரத்துடன் செயல்பட வழிவகுக்கும் என உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் அரசு, தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம், மதிப்பீடு தயாரித்தல், பணிகளின் வகை மற்றும்

நிலை) விதிகள், 2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, நாள் 20.12.2007ஐ வெளியிட்டது. இதன்படி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ரூ. 2 இலட்சம், ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.20 இலட்சம் வரையிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### *(ix) கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்*

கிராம ஊராட்சி கணக்குகளை முறைப்படுத்தவும் மற்றும் கணக்குகளை பராமரிப்பதற்கான வழிமுறைகள் 1997 மற்றும் 1998ல் வெளியிடப்பட்டது. இம்முறைகளில் சில நடைமுறை சிக்கல்களும், பின்னடைவுகளும் இருந்ததைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகையினை கிராம ஊராட்சி தலைவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள நிதியிலிருந்து செலுத்த அதிகாரமளித்தல் மற்றும் அதே சமயத்தில் அந்த நிதியினை முக்கியமல்லாத குறைந்த செலவினத்திற்கு செலவிட தடை செய்யவும் அத்துடன் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஒப்புதல் இல்லாமல் திட்ட நிதி/தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதி கணக்கில் இருந்து தொகையினை எடுப்பதை தடுக்கவும் ஊராட்சிக் கணக்குகள் பராமரிக்கும் முறையினை ஒழுங்குபடுத்த உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு அரசாணை எண். 146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 17.08.2007ல் கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்குமுறைபடுத்தியும் கணக்குகள் முறையாக பராமரித்தல் தொடர்பான வழிமுறைகளையும் வெளியிட்டது. அதன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும், கிராம ஊராட்சி நிதிக் கணக்கு, தமிழ்நாடு மின்வாரிய/குடிநீர் வடிகால் வாரிய கட்டணம் செலுத்துதல் கணக்கு, கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு என மூன்று கணக்குகளை பராமரிக்க வேண்டும். நான்காவதாக தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் அத்திட்டத்திற்கான கணக்கும் பராமரிக்கப்பட வேண்டும்.

### *(x) அடையாள அட்டைகள்*

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்களது அலுவலக பணி தொடர்பாக பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. மேலும் அவர்கள் மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியிலும் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென உயர்நிலைக் குழு பரிந்துரைத்தது. அதனடிப்படையில், அனைத்து ஊரக உள்ளாட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### *(xi) வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிராம ஊராட்சிகள்) அதிகாரமளித்தல்*

அனுபவம் வாய்ந்த மற்றும் முதுநிலையிலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களை, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)–ஆக நியமனம் செய்யும் வகையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) பதவியினை தற்சார்பு ஊதியம் வழங்கும் பதவியிடமாக மாற்றிட வேண்டும் என உயர்நிலைக்குழு தனது இடைக்கால பரிந்துரையில் தெரிவித்திருந்தது. அதனடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) பதவியினை தற்சார்பு

ஊதியம் வழங்கும் பதவியிடமாக மாற்றி அரசாணை எண். 141, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.1) துறை, நாள் 09.08.2007–ல் அரசு ஆணையிட்டுள்ளது.

### *(xii) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாகனங்கள்*

உயர்நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை, நாள் 12.07.2007ல், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் வாகனங்களுக்கு தற்போதைய எரிபொருள் வரம்பினை 75 லிட்டரிலிருந்து 100 லிட்டராகவும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வட்டார ஊராட்சி) ஆகியோரின் வாகனங்களுக்கு 100 லிட்டரிலிருந்து 150 லிட்டராகவும் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.36, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1) துறை, நாள் 04.03.2008ல் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு வாகனங்கள் வழங்க அரசு அனுமதியளித்தது. அதனடிப்படையில் வாகனங்கள் வாங்கப்பட்டு 28.07.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன.

### *(xiii) கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி*

கிராம பொதுமக்களும், வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்களும், ஊராட்சித் தலைவர்களை எளிதில் தொடர்பு கொள்ள ஏதுவாக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தொலைபேசி வசதி ஏற்டுத்திட வேண்டும் என உயர்நிலைக்குழு பரிந்துரைத்திருந்தது. அதனடிப்படையில், அரசாணை (நிலை) எண் 118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.4) துறை, நாள் 02.07.2007 ன்படி, தொலை பேசி வசதி இல்லாத 7,238 கிராம ஊராட்சிகளிலும் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சிகள் தங்கள் பொது நிதியிலிருந்து தொலைபேசி கட்டணத்திற்காக மாதந்தோறும் ரூ.750–க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### *(xiv) ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி*

உயர் நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில் 2007–08ஆம் ஆண்டில் 24 மாவட்டங்களில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதியினை ரூ.3.76 கோடி செலவில் அமைக்க அனுமதித்து அரசாணை எண். 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.4)துறை, நாள் 02.08.2007–ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

### *(xv) கைப்பம்பு, விசைப்பம்பு மற்றும் தெருவிளக்குகள் உதிரி பாகங்கள் வாங்குதல் – கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளித்தல்*

அரசாணை எண்.83, ஊரக வளர்ச்சி (மாஅதி.3) துறை, நாள் 29.08.2006ன்படி, பொறியாளர்களின் மதிப்பீடு மற்றும் பட்டியல் அனுமதி இல்லாமல், ஆண்டொன்றிற்கு ஒரு கைப்பம்பிற்கு ரூ.600/– வரையும், ஒரு விசைப்பம்பிற்கு ரூ.7,500/– வரையும் ஊராட்சித் தலைவர்களால் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கைப்பம்பு மற்றும் விசைப்

பம்பு பராமரிப்பில் ஊராட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த நிதி வரம்பின்படி, எதிர்காலத்திலும் ஊராட்சித் தலைவர்களால் செலவினம் மேற்கொள்ளப்படலாம் எனக் குழு பரிந்துரை செய்தது. அதன்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் இந்த அதிகாரத்தினை தொடர்ந்து செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### *(xvi) தெருவிளக்குகள் மற்றும் உதிரிபாகங்கள் கொள்முதல் செய்தல் – கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளித்தல்*

அரசாணை எண். 149, ஊரக வளர்ச்சி(டி3) துறை, நாள் 16.07.1998 ன்படி, ISI / ISO 9000 சான்றளிக்கப்பட்ட தெருவிளக்கு உதிரிப்பாகங்களை கிராம ஊராட்சித் தலைவர்களே கொள்முதல் செய்து கொள்ளவும், இதனை உள்ளூர் கடைகளிலேயே கொள்முதல் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த அதிகாரம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படலாம் என உயர்நிலைக்குழு பரிந்துரைந்திருந்தது. இதனடிப்படையில் ஊராட்சி மன்றத் தலைவர்களின் இவ்வதிகாரம் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### *(xvii) ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான பயிற்சி*

உயர்நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.103, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி3) துறை, நாள் 19.06.2007–ன்படி உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான பயிற்சிக்காக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிட்டது.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2007–08ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு புதிய விடுதிகள் கட்டுதல் உட்பட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.3,51,25,000/– அனுமதித்து அரசு ஆணையிட்டது. மேலும், 2008–09ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.25 இலட்சம் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

### *(xviii) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் நிறைவேற்றுதலை கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமை ஆக்குதல்*

ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ஊரகப் பகுதிகளில் திறன் சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நிதியாண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்யும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ஐ இந்திய அரசு இயற்றியது. தமிழ்நாட்டில் 2006–07ஆம் ஆண்டு 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2007–08ல் இத்திட்டம் 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 01.04.2008 முதல் இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்க அலுவலராக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரை நியமித்து இத்திட்டம் சிறப்பாக செயல்படும் வகையில் தமிழ்நாடு அரசு உரிய ஆணைகளை

வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தினை கொள்கை அளவிலும், செயல் அளவிலும் சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 110ன் கீழ் ஊராட்சியின் கட்டாயக் கடமையாகக் கொண்டு வந்து, இதனை கிராம ஊராட்சிகளின் கடமைகளில் ஒன்றாக அறிவிக்கலாம் எனவும் உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது.

கிராம ஊராட்சிகளின் மூலம் அவ்வப்போது செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும், தவறாது செயல்படுத்துவதை கிராம ஊராட்சித் தலைவர்களின் கட்டாயக் கடமையாக கொண்டு வரும் வகையில் 2008ஆம் ஆண்டு சட்ட எண் 41 மூலம் 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 46ல் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

### *(xix) நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல்*

உயர்நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை எண்.172, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.3) துறை, நாள் 15.10.2007ல் அரசு மீண்டும் நமக்கு நாமே திட்டத்தினை நடைமுறைப்படுத்தியும், இத்திட்டத்திற்காக 2007–08ஆம் ஆண்டிற்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்தும் உத்தரவிட்டுள்ளது.

### *(xx) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் புனரமைப்பு*

ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளை பழுது பார்க்கவும், புனரமைக்கவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி அதிகாரம் வழங்க வேண்டுமென்ற உயர்நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை எண்.94, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (எஸ்ஜிஎஸ்.4) துறை, நாள் 12.06.2007ல் 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளை ரூ.135 கோடியில் பழுது பார்க்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் அளித்தும் அரசு உத்தரவிட்டுள்ளது.

### *(xxii) அனைத்து கிராமங்களுக்கும் நூலகங்கள்*

உயர்நிலைக் குழுவின் இடைக்கால ஆலோசனையின் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நூலகங்களுக்கு மதிப்புறு நூலகர்களை மாதம் ரூ.750/– மதிப்பூதியத்தில் இரண்டாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் கிராம ஊராட்சிகளே நியமனம் செய்திட அரசாணை எண்.177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.2) துறை, நாள் 25.10.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.

### *(xxii) அனைத்து கிராமங்களிலும் விளையாட்டு மையங்கள்*

அனைத்து கிராம அண்ணா மறுமலச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட விளையாட்டு மையங்களைப் பராமரிக்கும் அதிகாரமும் நிதி அதிகாரமும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படவேண்டும் என உயர்நிலைக்குழு தனது இடைக்கால பரிந்துரையில் தெரிவித்திருந்தது.

அதன் அடிப்படையில், கிராம ஊராட்சிகள் விளையாட்டு மையங்களைப் பராமரிக்கவும், தொடர்ந்து நல்ல முறையில் நடத்தவும் ஆண்டு ஒன்றுக்கு பொது நிதியிலிருந்து ரூ.10,000/– வரை கிராம ஊராட்சிகள் செலவினம் மேற்கொள்ள அனுமதித்து அரசாணை எண்.80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 30.05.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.

### *(xxiii) சமூக நலம்*

உயர்நிலைக்குழு பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.60, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 02.06.2008ல் அரசு பின்வரும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

1. கிராம ஊராட்சிப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மதிய சத்துணவு மையங்களின் செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றை கிராம ஊராட்சி தலைவர்கள் மேற்பார்வையிடலாம் என்று ஏற்கெனவே பிறப்பித்திருந்த அறிவுரைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

2. சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித்திட்டம், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுபாப்புத் திட்டம் உட்பட அனைத்து திருமண உதவித் திட்டங்களிலும், பயனாளிகளின் பெயரை கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்யும். அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பயனாளிகள் அத்திட்டங்களுக்கான தகுதிகளை நிறைவு செய்துள்ளனரா என்பதை சமூக நலத்துறை அலுவலர்கள் சரிபார்த்த பின்னர் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் குறித்த பட்டியல் கிராமசபையின் தகவலுக்காக அனுப்பப்படும்.

3. ஊனமுற்றோர் நலத்துறையில் தனிநபர் பயன்பெறும் திட்டங்களில் கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்யும் பயனாளிகளின் பட்டியலுக்கு கிராம சபையால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. ஊனமுற்றோர் உதவித்தொகை/ ஓய்வூதியத் தொகை போன்றவை முறையாகவும், காலதாமதமின்றியும் வழங்கப்படுகிறதா என்பதை ஊராட்சிகள் கண்காணித்து, அவ்வாறு குறைகள் ஏதும் தெரியவரின், ஊராட்சி மன்ற நலக் குழு மூலம் அவற்றைக் களைய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

5. சமூக நலத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்களை ஏற்கனவே உள்ள கிராம ஊராட்சி மன்ற நலக் குழு, கண்காணிக்கும் குழுவாக செயல்பட வேண்டும்.

### *(xxiv) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தொடர்பான உயர்நிலைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.148, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26.12.2007ல் அரசு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பின்வரும் அதிகாரங்களை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

1) அரசாணை (நிலை) எண். 85, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 14.7.1999ன் படி கிராம ஊராட்சித் தலைவர்கள், பள்ளிகள் மற்றும் விடுதிகளைப் பார்வையிட அதிகாரம் அளித்து வெளியிடப்பட்ட ஆணையினை மீண்டும் வலியுறுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

2) தனி நபர் பயன்பெறும் தாட்கோ திட்டங்களின் கீழ் பயனாளிகளை தேர்வு செய்வதற்கு கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கவும், தாட்கோ, தகுதியின் அடிப்படையில் அப்பயனாளிகளை தேர்வு செய்வதுடன் அப்பயனாளிகள் விபரத்தினை கிராம சபையில் தகவலுக்காக தெரிவித்திடவும் வேண்டும்.

3) ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சித் தலைவர்கள் தனி நபர் பயனாளிகளை தேர்வு செய்யலாம். தனி வட்டாட்சியர், இப்பயனாளிகள் தகுதியானவர்கள் தான் என்பதை ஆய்வு செய்திட வேண்டும். விடுவிக்கப்படும் கொத்தடிமைகள் குறித்தும் அவர்களின் மறுவாழ்வு குறித்தும் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4) தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் முகவர்கள் மூலம் சில கிராமங்களில் ஊக்கத் தொகை வழங்கப்படுவதை மேற்பார்வையிடும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகிறது.

5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை உறுப்பினர்களை கிராம ஊராட்சி நலக் குழு உறுப்பினர்களாகத் நியமனம் செய்யலாம்.

### *(xxv) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்*

உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.93, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பி.ந. 3)துறை, நாள்– 23.11.2007ல் அரசு பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

1. இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளை ஆய்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது.

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இன மக்களுக்கு இலவச பட்டா வழங்க நிலங்களை தெரிவு செய்தல் மற்றும் அதற்கான பயனாளிகளை தெரிவு செய்ய கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. எனினும், பயனாளிகளின் பட்டியலும் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் தகுதியும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் சரிபார்க்கப்படும்.

3. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பயனாளிகளின் பட்டியலை கிராம ஊராட்சித் தலைவர்கள் தேர்வு செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அப்பட்டியலை முழுமையாக ஆய்வு செய்து அதிலிருந்து தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்வார்.

### *(xxvi) கல்வி*

1. உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 88, பள்ளிக் கல்வித் துறை, நாள் 21.04.2008–ல் அரசு உத்தரவிட்டுள்ளது. வயது வந்தோர் கல்வி மற்றும் முறை சாராக் கல்வி மையங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி, நாள் 27.08.1999ஐ மீண்டும் வலியுறுத்தி அரசு உத்தரவிட்டுள்ளது.

2. அரசாணை (நிலை) எண். 90, பள்ளிக் கல்வி (எஸ்.2) துறை, நாள் 21.04.2008–ல் ஏற்கனவே அரசாணை (நிலை) எண்.248, பள்ளிக் கல்வி, நாள் 11.06.1997ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மீண்டும் வலியுறுத்தி உத்தரவிட்டுள்ளது. ஊராட்சி தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், பள்ளிக் கட்டடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர் வசதி செய்து தருதல் போன்றவற்றை பார்வையிட்டு உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பலாம். அவர்கள் அளித்த அறிக்கை அடிப்படையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய மாதாந்திரக் கூட்டத்தில் கலந்து கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தர வேண்டும். மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கையினை ஆய்வு செய்து ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### *(xxvii) பொது விநியோகம்*

உயர்நிலைக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை (3டி) எண்.4, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்.1) துறை, நாள் 31.01.2008–ல் அரசு பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

1. தங்கள் எல்லைக்குட்பட்ட நியாய விலைக் கடைகளை ஊராட்சித் தலைவர்கள் மேற்பார்வை செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படுகிறது.

2. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்ட வழங்கல் அலுவர்களால் வட்ட அளவில் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அக்கூட்டங்களில் பொது விநியோகத் திட்டம் குறித்த குறைகளையும், ஆலோசனைகளையும் வழங்க ஊராட்சித் தலைவர்கள் அழைக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் துணைப் பதிவாளர்களையும், பொது விநியோகத் திட்ட அலுவலர்களையும் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் சேர்த்தல், நீக்கல் போன்ற எல்லா விவரங்களையும் உள்ளடக்கிய ‘அ’ பதிவேட்டை கிராம சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பயிர்க்கடன் பற்றிய விவரங்களும் பயன்பெறுவோர் பட்டியலும் கிராம சபையின் முன் வைக்கப்பட வேண்டும்.

5. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கென தனியே கிராம அளவில் குழு அமைப்பதற்கு பதிலாக கிராம ஊராட்சியே எல்லா திட்டங்களுக்கும் கிராம குழுவாக செயல்படும்.

### *(xxviii) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பிரச்சினைகள்*

உயர்நிலைக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் எரிசக்தித்துறை பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

1. அரசு கடித (நிலை) எண்.70, எரிசக்தித் (சி3) துறை, நாள் 24.07.2007ல் ஊரக உள்ளாட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் பணிகளுக்கான மின் இணைப்புகளுக்கான கட்டண விகிதம் ஒரு யூனிட்டுக்கு ரூ.3.40 லிருந்து ரூ.3ஆக 12.04.2007 முதல் குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

2. அரசு கடித (நிலை) எண்.93, எரிசக்தித் (சி3) துறை, நாள் 04.10.2007ல் தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் மின்வாரியத்திற்கு செலுத்தாமல் நிலுவையிலுள்ள மின் கட்டணத் தொகைக்கு அளிக்கப்படும் அபராத வரி விகிதத்தினை, தற்போதைய 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அபராத வரி விதிப்பதற்கான கால அளவு தற்போதைய 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. கிராம ஊராட்சிகளில் 30.03.2007 அன்றுள்ள நிலுவைத்தொகை ரூ.18.46 கோடி அரசால் தள்ளுபடி செய்யப்பட்டு, கடிதம் (நிலை) எண்.77, எரிசக்தித் (சி3) துறை, நாள் 14.08.2007–ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி 3) துறை, நாள் 26.06.2007ன்படி, புதியதாக அமைக்கப்படும் மின்கம்பம் ஒன்றுக்கு நிலையான கட்டணமாக ரூபாய் 9,500/–ஐ நிர்ணயித்து அரசு உத்தரவிட்டுள்ளது.

5. ஊராட்சிகளில் உள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தி, மின் அட்டை வழங்கி அதில் குறிப்பிடப்படும் மீட்டர் அளவுகள் அடிப்படையில் பட்டியல் வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

6. மீட்டர் அளவின் அடிப்படையில் மட்டுமே மின்வாரியம் மின்கட்டணப் பட்டியலை அனுப்ப வேண்டும்.

7. அரசாணை (நிலை) எண்.55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 01.04.2008ல் அரசு தெருவிளக்குகள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்களை மாற்றிப் பொருத்துவதற்கு, மின்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் உழைப்பூதியத்தை உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. குமிழ் விளக்குகளை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.0.50ல் இருந்து ரூ.5 ஆகவும், குழல் விளக்குகள் மற்றும் சோடிய ஆவி

விளக்குகளை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.2ல் இருந்து ரூ.20 ஆகவும், சோக்குகள், ஸ்டார்டர்கள் மற்றும் கன்டென்சர்களை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.10 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### *(xxix) வருவாய்த் துறை*

வருவாய்த் துறை தொடர்பான உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.231, வருவாய் (வ.நி.3.2) துறை, நாள் 29.04.2008–ல் அரசு பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

1. வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் கிராம நிர்வாக அலுவலர்களால் தொடர்ந்து பராமரிக்கப்படும். அவற்றின் நகல், நாளது வரையான விபரங்களுடன், ஒவ்வொரு மாதமும் உள்ளாட்சி அலுவலகத்திற்கு அளிக்கப்படும். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் ஆகியோர் பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்க அதிகாரமளிக்கப்படும். கிராம ஊராட்சித் தலைவரும், கிராம நிர்வாக அலுவலரும் வழங்கும் ஒவ்வொரு சான்று குறித்தும் ஒருவருக்கொருவர் ஒவ்வொரு மாதமும் தகவல் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

2. இருப்பிட சான்று, குடியுரிமைச் சான்று (Domicile Certificate) வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் சான்று ஆகியன, தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர்களாலும் வழங்கப்படும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் தயாரிக்கப்படும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் இதர துறைகளினால் செயலாக்கப்படும் பல்வேறு திட்டங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளுக்கு ஏதுவாக இருக்கும் வகையில் அமைய, வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படும். திருமணச் சான்றினைப் பொறுத்த வரை தற்போது பதிவுத்துறையால் வழங்கப்படும் முறையே தொடர்ந்து நீடிக்கும்.

3. முதியோர் ஓய்வூதியம், விதவைப் பெண்கள் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம், வறிய விவசாயத் தொழிலாளர் ஓய்வூதியம் போன்ற பிற ஓய்வூதிய திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல் கிராமசபையில் வைக்கப்பட வேண்டும். தகுதியான நபர்கள் விடுபட்டுள்ளனரா என்றும் தகுதியற்றவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா என்றும் கிராம சபை சரிபார்க்க வேண்டும். வருவாய்த்துறை, கிராம சபையின் பரிந்துரையின் அடிப்படையிலும், பயனாளிகளின் தகுதியின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பட்டியல் தொடர்பாக கிராமசபை ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பின், வருவாய்த் துறையினால் ஆட்சேபனைகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இறுதி முடிவு எடுக்கப்பட்டு கிராம சபைக்கு தெரிவிக்க வேண்டும்.

4. வீட்டுமனைப் பட்டாக்கள், இரண்டு ஏக்கர் தரிசு நிலம் வழங்குதல், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல், எரிவாயு அடுப்பு வழங்குதல் ஆகிய

திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல் வருவாய்த் துறையினால் மாதமொருமுறை கிராம ஊராட்சியின் முன்பும் காலாண்டுக்கு ஒருமுறை கிராம சபை முன்பும் வைக்கப்பட வேண்டும். இப்பட்டியல் தொடர்பாக கிராமசபை ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பின், வருவாய்த் துறையினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டு கிராம சபைக்கு தெரிவிக்க வேண்டும்.

5. கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களின் பட்டியல் அவற்றின் புல வரைபடத்துடன் (FMB Sketch) ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்மந்தப்பட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு வருவாய்த்துறை அலுவலர்களால் அளிக்கப்பட வேண்டும்.

6. வருவாய்த் துறைத் திட்டங்களுக்கான கிராம அளவிலான குழுக்களை வருவாய்த்துறை அமைக்கும்போது, அக்குழுக்களில் கிராம ஊராட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# 4. சட்டத் திருத்தங்கள்

# 4. சட்டத் திருத்தங்கள்

## 4.1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994க்கான திருத்தங்கள்

மக்களாட்சி பரவலாக்கம் என்பது ஒரு தொடர்ச்சியான நடைமுறை ஆகும். எனவே உள்ளூர் அரசாங்கத்திற்கான சட்டம் மற்றும் விதிகளுக்கு அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளுதல் அவசியமாகிறது. சட்டங்கள் மற்றும் விதிகள் ஆற்றல் மிக்கதாகவும், அவற்றை பயன்படுத்தும் மக்களின் எண்ணங்களை பிரதிபலிப்பதாகவும் இருத்தல் வேண்டும். இச்சட்ட விதிகளின் சீரிய செயல்பாடுகள் அவற்றினை மக்களின் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கும் அரசின் உறுதியினை கொண்டே அமையும். அல்லது இச்சட்ட விதிகள் பயனற்றதாகிவிடும். அரசானது, மக்களின் எண்ணங்கள் மற்றும் மக்கள் தேவைகளை உணர்ந்து செயல்படுவதில் என்றும் விழிப்புடன் இருப்பதால், ஜுன் 2006 முதல் மார்ச் 2008 முடிய உள்ள இரண்டு ஆண்டு காலத்தில் கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.1.1. கிராம ஊராட்சிகள்

#### *(i) மாவட்ட ஆட்சித்தலைவர்களால் கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்களை நியமித்தல்*

கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் சில காரணங்களுக்காக அரசிடம் இருந்தது. கிராம ஊராட்சிகளின் நிர்வாகம் தங்கு தடையின்றி சீரிய வகையில் செயல்படுவதை உறுதி செய்யவும் காலதாமதத்தை தவிர்க்கவும், தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னரும் அமைக்கப்பட இயலாத கிராம ஊராட்சி மன்றங்களுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களே தனி அலுவலர்களை நியமனம் செய்ய ஏதுவாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல், 2006ஆம் ஆண்டு சட்டம் எண் 38 ன்படி ஒரு புதிய பிரிவு, 9C சேர்க்கப்பட்டுள்ளது.

> ***9-C. குறித்த சில சூழ்நிலைகளில் தனி அலுவலரை நியமித்தல் –***
>
> *இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்த போதிலும், தேர்தல் நடைமுறைகளை நாடியதற்குப் பின்னரும், 2006ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாளன்று அமைத்துருவாக்கப்படவியலாத சிற்றூராட்சியைப் பொறுத்த அளவில், ஆய்வாளரானவர், மேற்சொன்ன சிற்றூராட்சியின் தேர்தலுக்குப் பின்னர், நடைபெறும் மேற்சொன்ன சிற்றூராட்சியின் முதல் கூட்ட நாள் வரையிலும் மேற்சொன்ன சிற்றூராட்சியின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அலுவல்களை ஆற்றுவதற்கும் அறிவிக்கையின் வாயிலாக தனி அலுவலரொருவரை நியமிக்கலாம்.*

#### *(ii) 'சிறப்பு கிராம ஊராட்சிகள்' நீக்கம் செய்தல் மற்றும் கிராம ஊராட்சிகளின் அளவு மற்றும் மக்கள் தொகையை மாற்றியமைத்தல்*

2004ஆம் ஆண்டு, பேரூராட்சிகள் நிலை இறக்கம் செய்யப்பட்டு, 'சிறப்பு கிராம ஊராட்சிகள்' என்னும் புதிய வகைப்பாட்டை அரசு உருவாக்கியது. இதனால், இந்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி பெறலாம் என்ற நோக்கமும் நிறைவேறவில்லை. பெரும்பாலான பேருராட்சிகள் ஊரக பகுதி அல்லாமல் தனித்தன்மை வாய்ந்த ஒரு நகரப்பகுதியாகவே அமைந்திருந்தது. எனவே பேரூராட்சிகள், பேரூராட்சிகளாகவே தொடர்வதும், அடிப்படை

வளர்ச்சி, அதிக அளவிலான வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் காலப்போக்கில் இவை நகராட்சிகளாக தரம் உயர்வதை அனுமதிப்பதே சரியான தீர்வாகும்.

இதன் காரணமாக 'சிறப்பு கிராம ஊராட்சிகள்' என்கிற நிலையினை நீக்கி, முன்னர் இருந்ததுபோல் பேரூராட்சிகள் என தொடர்வதற்கு வழிவகுக்கும் விதமாக 2006ஆம் ஆண்டு சட்டம் எண்.17ன்படி, 14.07.2006 முதல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல் உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

முந்தைய சட்டப்பிரிவுகளின்படி, ஊராட்சிகளின் ஆய்வாளர் 500-க்கும் குறைவாக மக்கள் தொகை இல்லாத ஒவ்வொரு ஊரகப்பகுதியையும் கிராம ஊராட்சி என அறிவித்தல் வேண்டும். மற்றும் 500க்கும் குறைவாக மக்கள் தொகை உள்ள எந்த பகுதியையும் அருகிலுள்ள கிராம ஊராட்சியில் இணைத்தல் வேண்டும். 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 500க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 66 கிராம ஊரட்சிகள், 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 500க்கும் குறைவான மக்கள் தொகையே கொண்டிருந்தது. இக்கிராம ஊராட்சிகளை ஒன்றிணைக்க எதிர்ப்புகள் இருந்தன. கிராம ஊராட்சிகளுக்கான அடுத்த சாதாரணத் தேர்தல், அக்டோபர் 24, 2006க்குள் நடத்தவேண்டிய சூழ்நிலையில், 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி புதிதாக தொகுதிகளின் எல்லைகளை சீரமைப்பதை மேற்கொண்டால், ஊராட்சிகளுக்கான தேர்தல்களை குறிப்பிட்ட தேதிக்குள் நடத்த இயலாது. பராளுமன்றம் மற்றும் சட்ட மன்ற தொகுதிகளின் எல்லை சீரமைப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஊராட்சிகளின் எல்லை சீரமைப்பு பணி மேற்கொள்வது சரியானதாக இருக்கும். எனவே ஒரு கிராம ஊராட்சியை அமைக்க குறைந்தபட்சம் 500 மக்கள் தொகை என்ற வரையரையை நீக்க அரசு முடிவு செய்தும், ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் அப்போதிருந்த வார்டு எல்லைகள் மற்றும் அவற்றின் வார்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே 2006ல் சாதாரண தேர்தல்கள் நடத்த வழிவகை செய்யும் ஒரு புதிய பிரிவு 28A, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல் சேர்க்கப்பட்டது.

சிறப்பு கிராம ஊராட்சி என்பதை பேருராட்சிகள் என மாற்றி அமைத்ததின் விளைவாக, கிராம ஊராட்சிகளில், தலைவர் அல்லாமல் 21 உறுப்பினர்கள் என்கிற எண்ணிக்கையை, 15 உறுப்பினர்கள் என குறைக்கப்பட்டது. ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் என்பது, ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு மற்றும் வார்டுகளிலுள்ள மக்கள் தொகை ஆகியவற்றில் காணப்படும் அதிக அளவிலான வேறுபாடுகளால், சரியாக வரையறுக்க இயலாது. எனவே ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு ஒரு உறுப்பினர் என்கிற வரையறையை நீக்கும் விதமாக 2006ஆம் ஆண்டு சட்டம் எண் 17ல் இதற்கான திருத்தம் ஒன்று வெளியிடப் பட்டு 14.07.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 4.1.2. தேர்தல்கள்

**(i)** முறைகேடுகளின் காரணமாக நீக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தலில் போட்டியிடும் தகுதியின்மை காலம் கடுமை வாய்ந்ததாக இல்லை. முறைகேடுகளின் காரணமாக நீக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர் மற்றும்

மேற்சொன்ன ஊராட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோரை எந்தத் தேதியில் அந்த ஊராட்சிகளின் அடுத்து வழக்கமான சாதாரண தேர்தலுக்குரிய அறிவிப்பு வெளியிடப்படுகின்றதோ அந்தத் தேதி வரையிலுமோ அல்லது அவர்களை நீக்குவதற்காக பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலம் முடிவடைவது வரையிலுமோ அல்லது நேர்வுக்கேற்ப அவர்களை நீக்குவதற்காக அரசால் தள்ளி வைக்கப்பட்டவாறான தேதியிலிருந்தோ, அதாவது இவற்றுள் எது முந்தியதோ அது வரையில், மேலே கூறப்பட்ட பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு தகுதியற்றவர்களாவர். இதனை கடுமையாக்குவதற்கு, மேற்சொன்ன கால அளவை ஓராண்டிலிருந்து மூன்று ஆண்டு களாக உயர்த்துவதற்காகவும் மேற்சொன்ன பதவியிடங்களில் ஏற்படும் தற்செயல் காலியிட மொன்றை நிரப்புவதற்கான தேர்தலை உள்ளடக்கிய தேர்தல் களில் போட்டியிடுவதிலிருந்து அவர்களை தகுதியற்றவர்களாக ஆக்குவதற்கும், 2007ஆம் ஆண்டு சட்டம் எண்.16ல் வேண்டிய திருத்தங்கள் 08.06.2007 முதல் அரசால் வெளியிடப் பட்டுள்ளது.

> ***பிரிவு 205***
>
> XXXX XXXX XXXX
>
> *(13) எந்த நபரைப் பொறுத்த அளவில், தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிடுகின்ற அறிவிக்கையொன்று **(11)**ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டுள்ளதோ, அந்த நபரானவர், **(12)**ஆம் உட் பிரிவின்படி அவ்வறிவிக்கை நீக்கம் செய்யப்பட்டிருந்தாலன்றி **(12)**ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதேனும் இருப்பின் அந்த ஆணையின் மூலமாகத் தள்ளி வைக்கப்பட்டு ள்ளவாறு அத்தகைய அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைகிற வரையில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.*
>
> ***பிரிவு 207***
>
> XXXX XXXX XXXX
>
> ***(13)** எந்த நபரைப் பொறுத்த அளவில், தலைமையர் பதவியிலிருந்து நீக்கி விடுகின்ற அறிவிக்கை ஒன்றை **(12)**ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த நபரானவர், அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடையும் வரையில் அவர் தலைமையராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும், அந்தப் பதவிகளில் ஏதொன்றையும் வகித்து வருவதற்குமோ தகுதியற்றவராக ஆதல் வேண்டும்.*
>
> ***பிரிவு 210 A***
>
> XXXX XXXX XXXX
>
> *(3) தலைவர், துணைத் தலைவர், தலைமையர், துணைத் தலைமையர் அல்லது நேர்விற்கேற்ப உறுப்பினர் பதவியிலிருந்து **(1)**–ஆம் உட்பிரிவின்படி நீக்கப்பட்ட நபர் எவரும், **(1)**–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அத்தகைய அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடையும் வரையில் மேற்சொன்ன பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது.*

### ***(ii) உறுப்பினர்கள் தகுதியிழத்தல் தொடர்பான முடிவை திறம்பட மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்குதல்***

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 37ஆம் பிரிவு (4)ஆம் உட்பிரிவின்படி, நபரொருவர், தேர்தல்

> *"**1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் **41** ஆம் பிரிவில் **(1)** ஆம் உட்பிரிவில் **33, 35, 37, 38, 40** ஆகிய பிரிவுகளின்படி தகுதியிழந்த வராகியுள்ள" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக " **33** ஆம் பிரிவின் அல்லது **35**ஆம் பிரிவின் அல்லது **37** ஆம் பிரிவின் **(1)**, **(2)** அல்லது **(3)**ஆம் உட்பிரிவின்படி அல்லது **38**ஆம் பிரிவின்படி அல்லது **40**ஆம் பிரிவின்படி தகுதியிழந்தவராகியுள்ள" எனும் சொற்றொடரானது அமைக்கப்பட்டுள்ளது.*

செலவுகளுக்கான கணக்கினை உரிய காலத்தில் தாக்கல் செய்யத் தவறியிருப்பாரேயானால், அவ்வாறு செய்யத் தவறியதற்குச் சரியான காரணமோ அல்லது நியாயமோ, அவர் பெற்றிருக்க வில்லையென்றால், உறுப்பினராகவோ அல்லது நேர்விற்கேற்ப தலைவராகவோ தெரிவு செய்யப்படுவதற்கு மற்றும் அவ்வாறு இருப்பதற்கு தகுதியிழந்தவராக அறிவிப்பதற்கு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் முந்தைய 41ஆம் பிரிவின் வகைமுறைகள், 37ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் முழு அதிகார அளவினை கட்டுப்படுத்துவதாக உள்ளன என்பதால் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தனது அதிகாரங்களை பயனுள்ள வகையில் திறம்பட செலுத்துவதற்கு இயலும் பொருட்டு இச்சட்ட பிரிவிற்கு 2007ஆம் ஆண்டு சட்டம் எண் 17 மூலம் 09.07.2007 முதல் அரசால் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

### *(iii) ஊராட்சி தேர்தலின்போது வாக்களிக்க ஏதுவாக தேர்தல் நாளன்று பொது விடுமுறை அளித்தல்*

> ***80A வாக்களிக்கும் நாளன்று பணியாளர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு வழங்குதல் –***
>
> *(1) வணிகம், வாணிபம், தொழில் நிறுவனம் அல்லது பிற நிறுவனம் எதிலும் பணி செய்யக்கூடிய மற்றும் ஊராட்சி எதற்கும் வாக்களிக்க உரிமையுடைய நபர் ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் நாளில் விடுப்பு வழங்குதல் வேண்டும் .*
>
> *(2) உட்பிரிவு (1)ன்படி அனுமதிக்கப்பட்ட விடுமுறையின் காரணமாக ஒருவரின் ஊதியத்தில் எந்தவிதமான பிடித்தமோ குறைப்போ செய்யக்கூடாது. மேலும் சாதாரணமாக இப்படிப்பட்ட நாளில் ஊதியம் பெற தகுதியில்லாத நபர் நியமிக்கப்பட்டிருந்தால், அவர் அந்நாளில் விடுமுறை அளிக்கப்படாமலிருந்தால் எந்த ஊதியத்தைப் பெறுவாரோ அந்த ஊதியத்தைப் பெற தகுதியுடையவராவார்.*
>
> *(3) உட்பிரிவு (1) அல்லது (2) ஆகியவற்றிலுள்ள வழிவகைகளை மீறுகிற பணியமர்த்துநர்மீது ரூ.500/– வரை அபராதம் விதிக்கலாம்.*
>
> *(4) அபாயம் மற்றும் நட்டம் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டு ஒரு வாக்காளருக்கு விடுமுறை மறுக்கப்படும் இனங்களுக்கு இப்பிரிவு பொருந்தாது .*

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வணிகம், வாணிபம், தொழில் நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்கள் எவற்றிலுமோ பணியாற்றுகிற மற்றும் வாக்களிக்கும் தகுதி யுடையவர் களுக்கு, தேர்தல் நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள் வழங்க இதற்கு முன் திட்டவட்டமான வகைமுறை எதுவும் கிடையாது. அதன் காரணமாக, 2006ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தல்களின்போது, வணிகம், வாணிபம், தொழில் நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களில் தேர்தல் நாளன்று வாக்களிக்க தகுதியுடைய பணியாளர்களுக்கு விடுமுறையொன்றை வழங்கவில்லை என்பது குறித்து பலதரப்பட்ட நிகழ்வுகள் ஏற்பட்டன. எனவே, இதனை தவிர்க்கும் நோக்கத்தில் வணிகம், வாணிபம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் வாக்களிக்கும் உரிமைப்பெற்ற பணியாளர்களுக்குத் தேர்தல் நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்குவதை அவற்றின் ஒரு கடமையாக ஆக்கும் வகையில் 2007ஆம் ஆண்டு சட்டம் எண் 12ன் மூலம் 31.05.07 முதல் அரசால் திருத்தம் வெளியிடப் பட்டுள்ளது. மேலும் அதனை மீறுகைக்காக 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வகைமுறையில் உள்ளதைப் போன்ற அளவிலான தண்டத் தொகையைக் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

### *(iv) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் அலுவலக பதவிக்காலம்*

ஏற்கனவே, பொருள் 2.1ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் அலுவலக பதவிக்காலம் இரண்டு ஆண்டு எனவும், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபரின் வயது 65 நிறைவுபெறுமானால் அவர் ஒய்வு பெறுதல் வேண்டும் எனவும் பிரிவு 239ல் திருத்தம் ஒன்று 2007 ஆம் ஆண்டு சட்டம் எண் 24 மூலம் 08.06.2007 அரசால் வெளியிடப்பட்டுள்ளது. அவர் தொடர்ந்து இரண்டு ஆண்டு கால அளவிற்கு பதவி வகித்தால், மீண்டும் இரண்டு பதவி காலத்திற்கு மறு நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவார். ஆயினும் எவரும் மொத்தத்திற்கு ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக பதவி வகித்தல் கூடாது.

### 4.1.3. நிதி

(i) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் ஒப்படைக்கப்பட்ட வருவாய்களில் தலவரி, தலமேல்வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல்வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவை முக்கியமானதாகும். கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஆட்சியர்களால் ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை சரிக்கட்டுவதில் அதிகமான காலதாமதம் ஏற்பட்டதாலும் ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை பகிர்ந்தளிப்பதில் சமச்சீரற்ற நிலை நிலவி வந்ததாலும் ஒப்படைக் கப்பட்ட வருவாய்களை விரைவாக வும், எளிதாகவும், சமமாகவும் பகிர்ந்தளிக்கும் பொருட்டு அரசு மாற்று பகிர்ந்தளிப்பு பங்கீட்டு முறையை அறிமுகப்படுத்த பரிசீலனை செய்து தலவரி, தலமேல்வரி, முத்திரைத் தாள் மீதான கட்டணம் மீதான மேல்வரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை மாநில அளவில் ஒருங்கிணைத்து, மாநில நிதி ஆணையத்தில் குறிப்பிட்டுள்ள பங்கீட்டு முறையைப் பின்பற்றி, மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு இடையேயான வருவாய்களை பகிர்ந்தளிக்க திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

> ***169. உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும் சொத்துரிமை மாற்றங்களின் பேரிலான தீர்வை வரியின் மீதான மேல்வரி ஆகியவற்றை வசூலிப்பது தொடர்பான ஆணைகள் :–***
>
> *அரசானது, அறிவிக்கையின் வாயிலாக,*
>
> *(அ) 167– ஆம் பிரிவின்படியான உள்ளூர்த் தீர்வையையும், 168–ஆம் பிரிவின்படியான உள்ளூர்த் தீர்வை மேல்வரியையும் மற்றும் 175–ஆம் பிரிவின்படியான சொத்துரிமை மாற்றங்களின் பேரிலான தீர்வை வரியின் மீதான மேல்வரியையும் வசூலிப்பதை ஒழுங்கு முறைப்படுத்தலாம் :*
>
> *(ஆ) உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும் சொத்துரிமை மாற்றங்களின் பேரிலான தீர்வை வரியின் மீதான மேல்வரி ஆகியவற்றின் மூலமான வருமானத் தொகைகள், சிற்றூராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே எந்த வீதங்களில் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என்பதனை நிர்ணயிக்கலாம் மற்றும் சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி எதிலும், திட்டவட்டமான செயற் திட்டம், திட்டம், திட்ட ஏற்பாடு அல்லது வரைதிட்டத்தை செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன வருமானத் தொகை களிலிருந்து தொகை எதனையும் வழங்கலாம் , மற்றும்*
>
> *(இ) உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும் சொத்துரிமை மாற்றங்களின் பேரிலான தீர்வை வரியின் மீதான மேல்வரி ஆகியவற்றை வசூலிப்பதில் அரசால் ஏற்க நேர்ந்த செலவினங்களைக் கழித்துக் கொள்ளலாம்.*

(ii) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் தலவரி, தலமேல்வரி மற்றும் முத்திரைத் தாள் மீதான கட்டணம் மீதான மேல்வரி ஆகியவற்றின் மூலமான வருமானத் தொகைகள் எந்த

வீதங்களின்படி கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய வீதம் எவ்வளவு என்பதனை நிர்ணயிப்பதற்கான விதிகளை அரசு மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில நிதி ஆணைய நிதி பகிர்விற்கான நடைமுறைகளை பின்பற்றி தலவரி, தலமேல்வரி மற்றும் முத்திரைத் தாள் மீதான கட்டணம் மீதான மேல்வரி ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயின் பெரும்பாலான பங்கினை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கவும் மற்றும் மீதமுள்ள பங்கினை எந்த ஒரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி பகுதியில் பல்வேறு திட்டங்கள், பணிகள், மற்றும் செயல் திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசு பயன்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ல் உரிய திருத்தங்கள் 12.03.2008 முதல் 2008ஆம் ஆண்டு சட்டம் எண்.11 ன் மூலம் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

### 4.1.4. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருதல் மற்றும் நிறைவேற்றுதல்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், அந்த அமைப்பில் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் மீது பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இழப்பு ஏற்படும் நிகழ்வில், அவரை நீக்கம் செய்ய நம்பிக்கை இல்லா தீர்மானம், ஒரு ஜனநாயக உரிமையாக பயன்படுத்தப்படும். கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்களுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும் எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அதிக அளவில் கொண்டு வரப்படுகின்றன . இவை சட்ட வகைமுறைகளைப் பற்றிய அதிகப்படியான விழிப்புணர்வு அல்லது ஊராட்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சகிப்புத் தன்மையற்ற போக்கு ஆகியவை காரணமாகவே உள்ளன. இந்தப் போக்கு மக்களின் நலனுக்கான அடிப்படை வசதி தேவைப்பாடுகள்,

> ***211. ஊராட்சி துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்***
>
> *XXXX XXXX XXXX*
>
> ***(2)** சிற்றூராட்சியில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் மூன்று பங்கு என்ற அளவிலான எண்ணிக்கைக்கு குறையாத சிற்றூராட்சி உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு விழைகின்ற எழுத்துருவிலான அறிவுப்புடன், கொண்டு வரக் கருதப்படுகின்ற தீர்மானத்தின் படியொன்றையும் சேர்த்து துணைத் தலைவருக்கெதிரான குற்றச்சாட்டுகளடங்கிய எழுத்துருவிலான விவரவுரையினை அறிவிப்பில் கையெழுத்திட்டிருக்கின்ற சிற்றூராட்சி உறுப்பினர்களில் ஏதேனும் இரண்டு உறுப்பினர்களால் அந்த வட்டத்தைச் சார்ந்த வட்டாட்சியரிடம் நேரில் சேர்க்கப்படுதல் வேண்டும்.*
>
> *XXXX XXXX XXXX*
>
> *(13) அந்தத் தீர்மானமானது அந்தச் சிற்றூராட்சியின் ஒப்பளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்குமாயின், அந்த ஆய்வாளர், அறிவிக்கை வாயிலாக, அந்தச் சிற்றூராட்சியின் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்தல் வேண்டும்.*
>
> ***(14)** தீர்மானமானது மேற்சொன்னவாறான அத்தகையதொரு பெரும்பான்மை வாயிலாக நிறைவேற்றப்படவில்லையாயின் அல்லது அந்தக் கூட்டமானது **(13)**ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள குறைவெண்வரம்பு இல்லாததால், நடத்த இயலாதிருக்குமாயின், அதே துணைத்தலைவரிடம் வைத்துள்ள நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகின்ற பிந்திய தீர்மானம் எதனையும் பற்றி அறிவிப்பு எதுவும், அந்தக் கூட்டத் தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவடைவது வரையிலும் பெற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.*
>
> ***(15)** இந்தப் பிரிவின்படியான தீர்மானம் பற்றிய அறிவிப்பானது,–*
>
> *(I) ஒரு துணைத் தலைவர் பதவியேற்றதிலிருந்து ஓர் ஆண்டு காலத்திற்குள் ; அல்லது*
>
> *(II) ஒரு துணைத் தலைவரின் பதவிக்கால அளவின் கடைசி ஆண்டின்போது பெற்றுக்கொள்ளப்படுதல் கூடாது.*

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வளர்ச்சிப் பணிகளின் செயற்பாடுகள் தொடர்பான உண்மையான பிரச்சினைகளிலிருந்து ஊராட்சிகளின் மற்றும் நிர்வாகத்தின் ஒருமுனைப்பாட்டையும், கவனத்தையும் திசை திருப்புவதாக அமைந்தது. இதன் விளைவாக ஊராட்சிகளின் கூட்டங்கள் நடத்தப் படுவதும் பாதிப்புக்குள்ளானது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருதற்கான உரிமையை உறுப்பினர்கள் தக்கவைத்துக்கொள்ளும் அதே நேரத்தில் இம்மாதிரியான விரும்பத்தகாத வகையிலான போக்கினைக் கட்டுப்படுத்துவதற்காக, இச்சட்டம் பிரிவு 211 மற்றும் 212ல் திருத்தம் மேற்கொண்டு அவசர சட்டம் எண் 9/2007 மற்றும் இதனை தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு சட்டம் எண் 10 அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இத்திருத்தம் 13.12.2007 முதல் நடைமுறையில் உள்ளது.

இந்தச் சட்ட திருத்தத்தின்படி, கிராம ஊராட்சி துணைத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் / துணைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்கள் / துணைத் தலைவர்கள் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம், ஒருவர் பதவியேற்றதில் இருந்து ஒர் ஆண்டு காலத்திற்குள் அல்லது பதவிக்கால அளவின் கடைசி ஆண்டின்போது கொண்டு வருதல் கூடாது. மேலும் ஐந்தில் மூன்று பங்கு என்ற அளவிலான எண்ணிக்கை குறையாத ஊராட்சி உறுப்பினார்களால் கையொப்பமிடப்பட வேண்டும். அந்த தீர்மானமானது, ஊராட்சி மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்குமாயின் மட்டுமே கிராம ஊராட்சி துணைத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் / துணைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்கள் / துணைத் தலைவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

***212. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்.***

*xxxx xxxx xxxx*

*(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் மூன்று பங்கு என்ற அளவிலான எண்ணிக்கைக்குக் குறையாத ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டதும், அந்த தீர்மானத்தைக் கொண்டு வரக் கருதியுள்ளது பற்றியதுமான எழுத்து வடிவிலான அறிவிப்பானது கொண்டு வரக் கருதியுள்ள அத்தீர்மானத்தின்படி ஒன்றுடன் மற்றும் தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளருக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் பற்றிய எழுத்து வடிவிலான விவர உரையுடனும் அந்த அறிவிப்பில் கையொப்பமிடுகின்ற ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களில் எவரேனும் இருவரால் அந்தக் கோட்டத்தின் வருவாய்க் கோட்ட அலுவலரிடம் நேரில் சென்று ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.*

*xxxx xxxx xxxx*

*(13) அந்த தீர்மானமானது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்குமாயின், அரசு அறிவிக்கையின் வாயிலாக, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைமையாளரை அல்லது துணைத் தலைமையாளரைப் பதவி நீக்கம் செய்தல் வேண்டும்.*

*xxxx xxxx xxxx*

*(15) இந்தப் பிரிவின்படியான தீர்மானம் ஒன்றுக்கான அறிவிப்பானது,–*

*(1) ஒரு தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர் பதவியேற்றதிலிருந்து ஓர் ஆண்டு காலத்திற்குள் ; அல்லது*

*(2) ஒரு தலைமையாளரின் அல்லது துணைத் தலைமையாளரின் பதவிக்கால அளவின் கடைசி ஆண்டின்போது பெற்றுக் கொள்ளப்படுதல் கூடாது.*

# 5. விதித் திருத்தங்கள்

# 5. விதித் திருத்தங்கள்

## 5.1. கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள மக்களாட்சி அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல், பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது.

**அட்டவணை 5.1**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வ. எண். | ஊராட்சிகளின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டட்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்டம் நடத்தும் முறையினை செம்மைப்படுத்தும் நோக்கில், இந்த அரசு, தமிழ்நாடு கிராம சபை (குறைவெண் வரம்பு, கூட்டங்கள் கூட்டுதல், நடத்துதல் மற்றும் வழிமுறை) விதிகள் 1998ல் அரசாணை (நிலை) எண்.130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை நாள் 25.9.2006 மூலம் தேவையான திருத்தங்கள் செய்து ஒவ்வொரு ஊராட்சியிலுள்ள வார்டுகளிலும், சுழற்சி முறையில் கிராம சபை நடத்திட உத்திரவிட்டுள்ளது. மேலும், பெரிய ஊராட்சிகளில் வாக்காளர்களில் 10 சதவீதத்தினர் கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற குறைவெண் வரம்பினை செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் குறைவெண் வரம்பில் கிராம சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காவது மகளிர் இடம் பெற வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் மக்கள் தொகை எத்தனை சதவீதம் உள்ளனரோ அத்தனை சதவீத தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென துணை குறைவெண்வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## 5.2. பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D-ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இட

ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, இணைந்து நிறைவாக்குகிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து அப்பிரிவினரின் மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின் கீழ், சுழற்சி முறையின் கால அளவும் 10 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1955 விதி 7ஐ அரசாணை நிலை எண்.105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 01.09.2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்டகாலமாக தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டை சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது.

## 5.3. தேர்தல் விதிகள்

(i) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் தடையின்றி நியாயமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு ஊராட்சி தேர்தல் விதிகள், 1995க்கு அரசாணை (நிலை) எண்,86, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள் 27.07.2006ல் உரிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டது. இதன்படி, தமிழ்நாடு தேர்தல் ஆணையம் ஒரு வருவாய் கோட்டம் அல்லது கோட்டத்தின் ஒரு பிரிவு அல்லது கோட்டத்தின் சில தொகுதியில் நடைபெறும் தேர்தலை கண்காணிக்கவும், அவ்வப்போது தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தால் ஒப்படைக்கப்படும் பிற பணிகளையும் கவனிக்கவும் அரசு அலுவலர் ஒருவரை தேர்தல் பார்வையாளராக நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நியமனம் செய்யப்படும் தேர்தல் பார்வையாளர் சில சூழ்நிலைகளில் சம்மந்தப்பட்ட தேர்தல் பொறுப்பு அலுவலரை தேர்தல் முடிவு அறிவிக்கும் முன்பாக எந்த நேரத்திலும் வாக்கு எண்ணும் பணியினை நிறுத்தவும், தேர்தல் முடிவுகளை அறிவிப்பதை நிறுத்தி வைக்கவும் கட்டளையிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான செலவினங்கள் அதிகமாவதை தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 4 ) துறை, நாள் 02.08.2006ல் தமிழ்நாடு ஊராட்சி (தேர்தல்) விதிகள், 1995, பிரிவு 121க்கு உரிய திருத்தங்கள் செய்து வேட்பாளர் செய்யக்கூடிய அதிகபட்ச செலவின உச்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. தேர்தலின்போது செய்யக்கூடிய திருத்தப்பட்ட அதிகபட்ச செலவின உச்ச வரம்பு கீழ்வருமாறு:

அ) மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினருக்கான தேர்தல் - ரூ.75,000

ஆ) ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினருக்கான தேர்தல் - ரூ.37,500

இ) ஊராட்சி மன்ற தலைவருக்கான தேர்தல் - ரூ.15,000

ஈ) ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினருக்கான தேர்தல் - ரூ. 3,750

## 5.4. ஊராட்சி கட்டட விதிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997ல், செயல் அலுவலரால் வழங்கப்படும் கட்டட அனுமதி மீது மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி கட்டட அனுமதி ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். இதில் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவே இறுதியானது. இதனால், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மேல்முறையீடு செய்ய மற்றும் ஒரு வாய்ப்பு அளிக்க வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு ஊராட்சி கட்டட விதிகளுக்கு அரசாணை (நிலை) எண் 85 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 2) துறை, நாள் 27.07.2006ல் திருத்தங்கள் வெளியிடப்பட்டது. இதன்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் மீது, ஆணை கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம். இதில் அரசின் முடிவே இறுதியானது.

## 5.5. தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள்

அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா. 1) துறை, நாள் 20.12.2007ன்படி தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள், 2007ஐ இது தொடர்பான 1998ம் ஆண்டில் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு பதிலாக அரசு கொண்டு வந்தது. இவ்விதிகள், கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கும், மாநில அரசு நிதி மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் செய்யப்படும் பணிகளுக்கும் பொருந்தும். இவ்விதிகளில் பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம் மற்றும் பணிகளை அளவு மற்றும் மேலளவு செய்யும் அதிகாரம் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர், ஒப்பந்தப்புள்ளி பெறும் அலுவலர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யும் அலுவலர் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகள் தங்கள் பொது நிதியில் இருந்து எடுக்கும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம் ரூ.20 இலட்சம், ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.2 இலட்சம் என உயர்த்தி வழங்கி ஆணையிட்டுள்ளது.

## 5.6. ஒப்படைக்கப்பட்ட வருவாயை ஒருங்கிணைத்திட விதிகளில் தேவையான திருத்தம் வெளியிடுதல்

ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களை சம்மந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரால் சரிக்கட்டுவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன்படி, தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (வரவு, செலவு மற்றும் கணக்குகள் பராமரிப்பு) விதிகள் 2000க்கு அரசாணை நிலை எண்.14 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 1) துறை, நாள் 14.01.2008ன்படி திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல்வரி, தலவரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவற்றை மாவட்ட அளவில் சரிக்கட்டுதல் தொடர்பான விதிகள் நீக்கம் செய்யப்பட்டன.

## 5.7. கல்வி நிறுவனங்களுக்கு வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்ததை வரையறை செய்தல்

மூன்றாவது மாநில நிதி ஆணையம், சுயநிதி பள்ளிகள், கல்லூரிகள், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவ கல்லூரிகள், பகுதி மருத்துவ நிறுவனங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி மையங்கள் போன்ற கல்வி கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள், வீட்டு வரி செலுத்த வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுக்கு எதிரான ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை மற்றும் 45 இதரர்கள் தொடர்ந்த வழக்கில் வீட்டு வரி விதிப்பிலிருந்து கல்வி நிறுவனங்களுக்கு விலக்கு அளிப்பது குறித்த தனது தீர்ப்பில், சென்னை உயர் நீதி மன்றம், 'விதி 15C, தகுதியை வரையறுக்காத பொது சொற்றொடராகும். கல்வியின் நோக்கங்கள் குறித்த பொருண்மைகளில் கட்டுப்படுத்தக்கூடிய எந்த வார்த்தைகளும் இதில் கொடுக்கப்பட வில்லை என கருத்து தெரிவித்துள்ளது. சுயநிதி கல்லூரிகளின் சொத்துக்கள் மீது, வீட்டு வரி வசூல் செய்யப்பட வேண்டும் என்ற மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையினை அரசு ஏற்று, அதன்படி தமிழ்நாடு ஊராட்சிகள் (வரி நிர்ணயம் மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999க்கு, அரசாணை (நிலை) எண். 38, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1) துறை, நாள் 05.03.2008ல் உரிய திருத்தங்களை வெளியிட்டது. அதன்படி, கிராம ஊராட்சிகள், சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் கட்டடங்கள் மீது வீட்டு வரி நிர்ணயித்து வசூல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு உதவி பெறாத சுயநிதி பாடப்பிரிவுகளை நடத்தும் அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களுக்கும் இது பொருந்தும்.

# 6. 2006–07 (ம) 2007–08ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட முக்கிய அரசாணைகள்

# 6. 2006–07 (ம) 2007–08ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட முக்கிய அரசாணைகள்

## 6.1. கூட்டங்கள்

**(i)** அரசாணை (2டி) எண்.59, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 3)துறை, நாள் 19.9.2007–ல் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் நடத்தும் கூட்டங்களில், கூட்ட நடவடிக்கையைத் தொடங்கும் முன்பு ஒரு திருக்குறளை கூறி அதற்கான கருத்தையும் கூறிய பின்னர் கூட்ட நடவடிக்கையைத் தொடங்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

***(ii) மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கான நிலையான பயணப்படியினை உயர்த்துதல்***

ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் நிலையான பயணப்படியினை இறுதியாக 1999ஆம் ஆண்டு உயர்த்தி வழங்கப்பட்டது. அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தற்போது ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை பார்வையிட தொடர்ந்து பயணம் செய்ய நேரிடுகிறது. மேலும், மாவட்ட அளவில் அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு கீழ்கண்டவாறு நிலையான பயணப்படியை உயர்த்தி அரசாணை எண் 569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி1) துறை, நாள் 28.09.2007ல் அரசு உத்தரவிட்டுள்ளது.

**அட்டவணை 6.1**

**ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான மாதாந்திர நிலையான பயணப்படி**

| வ.எண். | அலுவலகம் /பதவியின் பெயர் | முன்னர் வழங்கப்பட்ட மாதாந்திர நிலையான பயணப்படி (ரூ.) | மாதாந்திர நிலையான பயணப்படி (ரூ.) |
|---|---|---|---|
| 1. | கிராம ஊராட்சித் தலைவர் | 330 | 500 |
| 2. | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 550 | 750 |
| 3. | ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் | 220 | 400 |
| 4. | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 1,100 | 1,500 |
| 5. | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 330 | 500 |

## 6.2. ஊராட்சித் தேர்தல்கள்

**தேர்தல் பணியில் ஈடுபடும் போது உயிர் இழக்கும் அல்லது காயம் அடையும் அரசு மற்றும் அரசு அல்லாத பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குதல்**

பொதுத்தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் பணியில் ஈடுபடும் போது உயிர் இழக்கும் அல்லது காயம் அடையும் அரசு மற்றும் அரசு அல்லாத பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குதல் குறித்து 1997 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் அரசு ஆணையிட்டது. அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 4) துறை, நாள் 18.06.2007ல் உள்ளாட்சித் தேர்தல் பணியில் ஈடுபடும் போது உயிர் இழக்கும் அல்லது காயம் அடையும் அரசு மற்றும் அரசு அல்லாத பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குவது குறித்து அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, சிறிய காயங்களுக்கு ரூ.5,000/–, பலத்த காயங்களுக்கு ரூ.10,000/– மற்றும் இறப்பிற்கு ரூ.50,000/– இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும்.

## 6.3. உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்தல்

அரசாணை நிலை எண்.131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை நாள் 16.03.2007ல் உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்வதற்கான விரிவான வழிமுறைகளை அரசு வெளியிட்டது. இதன்படி உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைப்பு, பிரித்தல் மற்றும் இணைத்தல் குறித்து பொதுமக்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டறிய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முதல் கூட்டத்திற்கான அறிவிப்பினை அனைத்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வ தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் சங்கங்கள் ஆகியவற்றிற்கும் அனுப்ப வேண்டும். இரண்டாவது கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். மற்றும் அரசியல் கட்சிகள், கோரிக்கைகள் அளித்தவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியவர்களின் கருத்துக்களை கூடுமானவரை தனித்தனியாக கேட்டறிய வேண்டும். இக்கூட்ட அமர்வுகளின் அடிப்படையில் வரைவு பரிந்துரைகளை தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் வாயிலாக அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பி வைக்க வேண்டும். அதே சமயத்தில் இந்த வரைவு பரிந்துரை குறித்த ஆட்சேபணைகளை பெறும் நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட பொது அலுவலகங்களில் உரியவாறு விளம்பரப்படுத்த வேண்டும். தேவைப்படின் துறைத் தலைவர்கள் மாவட்ட அளவில் மூன்றாவது கூட்ட அமர்வினை நடத்தி வரைவு பரிந்துரையின் மீதான ஆட்சேபணை மற்றும் கோரிக்கைகளை கேட்டறியலாம். இதன் பின் தமது இறுதி பரிந்துரையினை துறைத் தலைவர்கள் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

## 6.4. மாவட்ட திட்டக்குழு

### *(i) மாவட்டத் திட்டக்குழுவின் பங்கு*

1997ஆம் ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 119, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 1) துறை, நாள் 15.09.2006ல் மாவட்டத் திட்டக்குழுவின் கடமைகள் வரையறுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாவட்டத் திட்டக் குழுவின் கடமைகள்**

1. மாவட்டத்திலுள்ள இயற்கை வளம் மற்றும் மனித வளம் குறித்த புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தல். மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்கும் பொருட்டு வரைபடங்கள் மூலம் இயற்கை வளத்தை மதிப்பீடு செய்தல்.

2. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சார்புத் துறைகள், பொருளாதார மேம்பாடு மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக தயாரித்த திட்டங்களை தொகுத்தல். மாவட்டத் திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்தாலோசித்து அரசு வெளியிட்டுள்ள நெறிமுறைகளின்படி வரைவு மாவட்ட வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

3. பகுதி சார்ந்த திட்டங்களை மேற்கொள்ளல்; அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்தல் ஆகியவை குறித்து உதவும் பொருட்டு, ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக நீர்வளம் மற்றும் இயற்கை வளத்தை பகிர்ந்து கொள்ளுதல் குறித்து ஆலோசனை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

4. வளர்ச்சியினை தடைபடுத்தும் காரணிகளை கண்டறிதல் மற்றும் மாவட்டத்திற்கு ஏற்ற திட்டங்களை ஆராய்ந்து செயல் திட்டங்களை உருவாக்குதல்.

5. மத்திய அரசின் திட்டங்கள் உள்பட செயல்பாட்டில் உள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்/ பணிகள் ஆகியவற்றை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

***(ii) மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்கள்***

அரசாணை (நிலை) எண்.13, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 4) துறை, நாள் 09.02.2007ல் மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து மாவட்டத் திட்டக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாவட்ட வாரியாக நிர்ணயித்து அரசு ஆணையிட்டது.

## 6.5. மாநில நிதி ஆணையம்

***அ. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில அளவிலான மன்றம் அமைத்தல்***

இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பொதுவான கோட்பாடுகள் விவாதிக்கப்பட வேண்டியவைகளும், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொதுவான குறிக்கோள்களைபற்றி விவாதிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான மன்றம், அரசு ஆணை எண்.139, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 09.10.2006ல் அமைக்கப்பட்டது. மன்றத்தின் ஆய்வு எல்லையும் அரசாணையில் அறுதியிட்டு கூறப்பட்டுள்ளது.

***ஆ. மாநில அரசால் வழங்கப்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்குகான நிதி ஆதாரப் பகிர்வுகள்***

மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின்படி, மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் பகிர்வு குறித்து, அரசாணை எண்.199, நிதித்துறை, நாள் 25.05.2007ல் அரசு பின்வருமாறு ஆணையிட்டுள்ளது.

1. 2007–08ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த வரி வருமானத்திலிருந்து 9 சதவீத நிதி பகிர்வு.
2. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை செயல்படும் காலத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கிடையேயான பங்கீடு விகிதாசாரம் 58:42
3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவை முறையே 60:32:8 என்ற விகிதாச்சாரத்தில் மானியம் பிரித்து வழங்கப்படும்.
4. கிராம ஊராட்சிக்கான 60 சதவீத பங்கில், உட்கட்டமைப்பு நிதிக்கென 5 சதவீதம் தனியாக ஒதுக்கப்படும்.
5. உள்கட்டமைப்பு நிதியிலிருந்து 50 சதவீதம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கும், ஊரகப்பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கென ஒரு பகுதியினை ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் தக்க வைத்திடவும் மீதமுள்ள நிதி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்படும்.
6. ஊரக உள்ளாட்சிகளின் ஒவ்வொரு அமைப்புகளுக்கும் 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் நிதி பகிர்வு செய்யப்படும்.

### 6.6. ரூ.3 கோடி ஒதுக்கீட்டில் பயற்சி தொகுப்பு நிதி உருவாக்குதல்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு முறையான பயிற்சி அளிக்க மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சிக்கான மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து முறையே 8:32:60 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் ரூ.3 கோடி, ஒரு ஆண்டுக்கான பயிற்சி தொகுப்பு நிதியாக ஒதுக்கீடு செய்ய அரசாணை (நிலை) எண். 103, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 3) துறை, நாள் 19.06.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.

### 6.7. மாநில நிதி ஆணைய மானியத்தை மாவட்ட ஊராட்சிகள் பயன்படுத்துவது குறித்த திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள்

மாவட்ட ஊராட்சிகள், மாநில நிதி ஆணைய மானியத்தை பயன்படுத்துவது குறித்து அரசாணை எண்.138, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 09.08.2007 திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. மேற்படி திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, இந்த மானியத்தை, சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கவும், கப்பிச்சாலைகள், தார்சாலையாக மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநேயோகத் திற்கும் பயன்படுத்தலாம். மற்ற வேலைகளுக்கு இந்த மானியத்தில் 50 சதவீதத்திற்கு மிகாமல் பயன்படுத்தலாம். இம்மானியத்திலிருந்து, நிர்வாக செலவினங்களுக்கென மாவட்ட ஊராட்சிக்கான ஒதுக்கீட்டில் 10 சதவீதம் அல்லது ரூ.15 இலட்சம் இதில் எது குறைவோ, அதனை பயன்படுத்திக்கொள்ளலாம்.

### 6.8. உள் கட்டமைப்பு நிதியை பயன்படுத்துதல் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள்

அரசாணைகளின்படி நிதிப்பகிர்வு மான்யத்தில் 5 சதவீதம் உள்கட்டமைப்பு நிதியாகும். இதில் 50 சதவீதம், அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள 50 சதவீதத்தில் 25 சதவீதம் மாவட்டங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரிடமும், 75 சதவீதம் மக்கள் தொகை அடிப்படையில், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் உள்ளது. அரசாணை எண்.182, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 02.11.2007ல், உள்கட்டமைப்பு நிதியினை பயன்படுத்துதல் குறித்த வழிகாட்டி நெறிமுறைகளுக்கான ஆணையினை அரசு வெளியிட்டுள்ளது.

### 6.9. ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.135 கோடி ஒதுக்கீடு

அரசாணை எண் 157, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 10.09.2007ன்படி, மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்பு திட்டத்திற்கு ரூ.135 கோடி ஒதுக்கீடு செய்து அரசு உத்திரவிட்டுள்ளது.

### 6.10. பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியம்

***பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் கிராம ஊராட்சிகளின் பங்கீட்டை 80 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்துதல்***

தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுப் பணிகள் ஆகிய பொறுப்புமிக்க பணிகளை மேற்கொள்ளும் கடமை கிராம ஊராட்சிகளுக்கு இருப்பதால், தனது அரசாணை எண்.19, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 26.02.2007ல் பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தினை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 80:20 என்ற விகிதத்தில் வழங்குவதற்கு பதிலாக மொத்த மானியத்தினையும் கிராம ஊராட்சிக்கே வழங்க முடிவு செய்துள்ளது. கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும் ஒதுக்கீடு மக்கள் தொகையின் அடிப்படையில் இருக்கும். பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத் தொகை கிராம ஊராட்சியால் குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள் மற்றும் துப்புரவு பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த செலவினத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

### 6.11. ஒப்படைக்கப்பட்ட வருவாய்

***(i) மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாய்களை ஒருங்கிணைத்தல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்தல்***

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான தலவரி, தலமேல்வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மிகு வரி, கேளிக்கைவரி ஆகியவை மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு, அவற்றில் மூன்றில் இரண்டு பங்கு வருவாய் காலாண்டு அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரால், மாநில நிதி ஆணைய நிதி விடுவிக்கும் முறையிலேயே செயல்படுத்த வேண்டும் என அரசாணை எண் 168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 4) துறை, நாள் 04.10.2007ல் ஆணையிட்டுள்ளது. மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு தொகை, அரையாண்டு அடிப்படையில் தனியாக ஒரு கணக்கில் வரவு வைக்கப்படும். இத்தொகையானது ஊரக பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தலாம்.

### *(ii) ஊரக பகுதிகளில் முன்னுரிமை திட்டங்களுக்கான நிதியினை ஏற்படுத்துதல்*

அரசாணை எண் 168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 4) துறை, நாள் 04.10.2007ல், மாநில அளவிலான ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் ஒரு பங்கு, ஊரகப்பகுதிகளில் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதியில் வரவு வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அரசாணை எண். 191, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 4) துறை, நாள் 22.11.2007ல், அரசு "ஊரகப்பகுதிகளில் முன்னுரிமை திட்டங்களுக்கான நிதி" என்ற நிதியினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதி ஊரகப்பகுதிகளில் அடிப்படை உள் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளவதற்காக பயன்படுத்தப்படும். மேலும் அரசு இந்நிதியினை பயன்படுத்தவும், திட்டங்களுக்கு அனுமதி அளிக்கவும், விரிவான வழிமுறைகளை வகுத்துள்ளது.

## 6.12. பொது நிதி வேலைகள்

### *(i) ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னுரிமைப் பணிகள்*

அரசாணை எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 2) துறை, நாள் 03.07.2006ல், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள், தங்களின் பொது நிதியிலிருந்து சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தார் சாலை மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம் என வழிமுறைகள் வகுத்துள்ளது.

### *(ii) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் நிறுவுதல் குறித்த வரையறைகள்*

அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.3) துறை, நாள் 11.07.2006ல் சோடியம் ஆவி விளக்குகள் நிறுவுதல் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் குறித்த வரையறைகளை அரசு வெளியிட்டது. இதன்படி 500க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 2 சோடியம் ஆவி விளக்குகள், 501 முதல் 1000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 4 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 1001க்கு மேலான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 6 சோடியம் ஆவி விளக்குகள் நிறுவுவதற்கு வரையறை செய்து ஆணையிடப்பட்டது. அதே போல், 500க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 250 மீட்டர், 501 முதல் 1,000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 750 மீட்டர், 1001 முதல் 3,000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 1.5 கி.மீ. மற்றும் 3,001க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 3 கி.மீ. சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை அமைப்பதற்கு வரையறை செய்து ஆணையிடப்பட்டது.

## 6.13. குடிநீர் வசதி

### *கைப்பம்பு மற்றும் விசைப்பம்புகளுக்கான ஆண்டு பராமரிப்புச் செலவினைத்தை உயர்த்துதல்*

அரசாணை (நிலை) எண்.63, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.3) துறை, நாள் 29.06.2006ல் அரசு கைப்பம்புகளுக்கான ஆண்டு பராமரிப்புச் செலவினைத்தை ரூ.300லிருந்து ரூ.600 ஆகவும், விசைப்பம்புகளுக்கான ஆண்டு பராமரிப்புச் செலவினைத்தை ரூ.7,000 லிருந்து ரூ.7,500 ஆகவும் உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

## 6.14. தெருவிளக்குகள்

### *(i) புதிய மின்கம்பம் நிறுவுவதற்கான கட்டணம் ரூ.9,500/– ஆக நிர்ணயித்தல்*

தெரு விளக்குகளுக்கான புதிய மின் கம்பங்களை அமைப்பதற்கு மதிப்பீடு செய்வதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் அதிக செலவினம் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.3) துறை, நாள் 26.06.2007ல் 13.06.2007 முதல் புதிய மின்கம்பம் நிறுவுவதற்கான கட்டணம் ரூ.9,500/–ஆக நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

### *(ii) மின் கட்டண விகிதத்தினை ஒரு யூனிட்டுக்கு ரூ.3.40 ல் இருந்து ரூ.3 ஆக குறைத்தல்*

அரசு கடித (நிலை) எண்.70, எரிசக்தித் (சி3) துறை, நாள் 24.7.2007ல் ஊரக உள்ளாட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் பணிகளுக்கான மின் இணைப்புகளுக்கான கட்டண விகிதத்தை 12.04.2007 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ.3.40 லிருந்து ரூ.3 ஆக குறைத்திட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வழிமுறைகள் அரசால் வழங்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.95, எரிசக்தித் (டி2)துறை, நாள் 02.10.2007ல் இதற்கான மானியத்தினை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

### *(iii) காலதாமதமாக கட்டப்படும் மின்கட்டணங்களுக்கான அபராதவரியினை குறைத்தல்*

அரசு கடித (நிலை) எண்.93, எரிசக்தித் (சி3) துறை, நாள் 4.10.2007ல் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு காலதாமதமாக கட்டப்படும் மின்கட்டணங்களுக்கான அபராதவரி விகிதத்தை தற்போதைய 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்தை செலுத்துவதற்கான கால அளவு தற்போதைய 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

### *(iv) பிற துறைகள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கான மின் வசதி*

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாட்டிற்கு மட்டுமின்றி பல்வேறு பிற துறைகளின் பயன்பாட்டிற்கும் பல்வேறு வகையான கட்டடங்களை கட்டி வருகிறது. 'உபயோகிப்பவரே தொகையை செலுத்த வேண்டும்' என்ற அடிப்படையில் இந்த கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளே மின்சாரக் கட்டணங்களை செலுத்த வேண்டும். ஆனால் இந்தக் கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சொந்தமாக இருந்ததால் இந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளால் தங்களது பெயரில் மின்சார இணைப்பு பெற இயலாத நிலை இருந்தது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், அரசாணை எண் 206, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ((மாஅதி.1) துறை, நாள் 31.12.2007ன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்கள் மூலம் பிற துறைகளுக்காகக் கட்டப்பட்ட கட்டடங்களில் அத்துறைகளே மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் விண்ணப்பிக்க வழிவகை செய்தும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்தவித நிதிப் பொறுப்புமின்றி மின் கட்டணத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு செலுத்தவும் "மறுப்பேதும் இல்லை" சான்றினை அரசு வழங்கியுள்ளது.

## 6.15. கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைபடுத்துதல்

கிராம ஊராட்சிக் கணக்குகளை சீரமைத்து அவற்றினை பராமரிப்பதற்கான வழிமுறைகளை, அரசு 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் வெளியிட்டது. இதில் காணப்பட்ட குறைபாடுகளை களையும் பொருட்டு சில மாற்றங்கள் செய்வது அவசியமானது. எனவே கிராம ஊராட்சிக் கணக்குகளை மேலும் முறைப்படுத்தவும், மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை நெறிப்படுத்துவதற்குமான அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 4)துறை, நாள் 17.08.2007ல் அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகையினை கிராம ஊராட்சித் தலைவர்கள் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள நிதியிலிருந்து செலுத்த அதிகாரமளித்தும் அதிக முக்கியமல்லாத செலவினத்திற்கு செலவிடத் தடை விதித்தும், மேலும் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஒப்புதல் இல்லாமல் திட்ட நிதி / தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதிக் கணக்குத் தொகையினை எடுப்பதைத் தவிர்த்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது செய்யப்பட்டுள்ள சீரமைப்பின்படி கிராம ஊராட்சிகள் நான்கு கணக்குகளை, அதாவது, கிராம ஊராட்சி நிதிக் கணக்கு, கிராம ஊராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் கணக்கு, கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு மற்றும் தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டக் கணக்கு ஆகியன பராமரிக்க வேண்டும்.

## 6.16. சாலைகள்

### *(i) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை விரிவான ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்துதல்*

அரசாணை (நிலை) எண்.78, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.2) துறை, நாள் 17.07.2006 மற்றும் அரசாணை (நிலை) எண்.163, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.2) துறை, நாள் 21.11.2006 ஆகியவற்றில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் போக்குவரத்தினை எளிதாக்கும் வகையில் விரிவான ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்கு அரசு ரூ.25 கோடி ஒதுக்கி ஆணையிட்டது.

### *(ii) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் மேம்படுத்துதல்*

அரசாணை (நிலை) எண்.118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.2) துறை, நாள் 14.09.2006ல் 899 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூ.107.39 கோடியில் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் நபார்டு நிதியுதவியுடன் மேம்படுத்த அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டது.

### *(iii) 2006–07 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் தரம் உயர்த்துதல்*

2006–07 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ இணைக்கும் மோசமான நிலையில் உள்ள சாலைகள் மற்றும் இக்கிராமங்களில் தொழில், சுற்றுலா மற்றும் சந்தைகளை இணைக்கும் சாலைகள் என மொத்தம் 1,491 கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூ.410.05 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் தரம் உயர்த்துவதற்கு அனுமதித்து அரசாணை (நிலை) எண்.185, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.2) துறை, நாள் 16.11.2007ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### *(iv) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை 2006–07ஆம் ஆண்டு 12வது நிதி ஆணைய மானியத்தின் கீழ் பராமரித்தல்*

2006–07ஆம் ஆண்டு 12வது நிதி ஆணைய மானியத்தின் கீழ் 1,898 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்சாலைகளில் ரூ.103.60 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.222, நெடுஞ்சாலை (எச்.எப்.1) துறை, நாள் 01.11.2006ல், அரசு ஆணையிட்டது.

### *(v) 2007–08 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் தரம் உயர்த்துதல்*

2007–08 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ இணைக்கும் மோசமான நிலையில் உள்ள சாலைகள் மற்றும் இக்கிராமங்களில் தொழில், சுற்றுலா மற்றும் சந்தைகளை இணைக்கும் சாலைகள் என மொத்தம் 1,241 கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் பாலங்களை ரூ.414.56 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் தரம் உயர்த்துவதற்கு அனுமதித்து அரசாணை (நிலை) எண்.105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.1) துறை, நாள் 19.06.2008ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### *(vi) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை 2007–08ஆம் ஆண்டு 12வது நிதி ஆணைய மானியத்தின் கீழ் பராமரித்தல்*

2007–08ஆம் ஆண்டு 12வது நிதி ஆணைய மானியத்தின் கீழ் 1,801 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்சாலைகளை ரூ.103.60 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.176, நெடுஞ்சாலை (எச்.எப்.1) துறை, நாள் 13.07.2007ல் அரசு ஆணையிட்டது.

## 6.17. தகவல் தொடர்பு

### *(அ) உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கு நிகரி இயந்திரமும் ஒளிப்பட படி பெருக்கி இயந்திரமும் வழங்குதல்*

மாநிலத்தில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் மூலம் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வாராந்திர, மாதாந்திர செயல் மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகளும், மற்றும் கருத்துருக்களும் மத்திய மற்றும் மாநில அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதனால் பல்வேறுபட்ட நகல்கள் அதிகமாக எடுக்க வேண்டியுள்ளது. அதனை கருத்திற்கொண்டு, அரசாணை (நிலை) எண் 73, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.4)துறை, நாள் 25.05.07ல், ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு உயர்ந்த சக்தி வாய்ந்த 2 ஒளிப்பட படி பெருக்கியும், மாவட்டங்களில் உள்ள உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கும், 385 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் 414 ஒளிப்பட படி பெருக்கியும், 414 நிகரி இயந்திரமும் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

### *(ஆ) கிராம ஊராட்சிகளுக்கு தொலைபேசி வசதி*

கிராம ஊராட்சி தலைவர்களும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் ஒருவரோடு ஒருவர் எளிதாக கலந்துரையாடவும், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும் என சட்டசபையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அறிவித்திருந்தார். அதன்படி, அரசாணை (நிலை) எண் 180, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.4) துறை, நாள் 02.07.2007ன்படி தொலைபேசி இணைப்பு வசதி இல்லாத 7,238 கிராம ஊராட்சிகளில் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டதுடன் அதற்கு கட்டணமாக மாதம் ரூ.750/- வரை செலவு செய்யவும் அரசு அனுமதியளித்துள்ளது.

### *(இ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி*

அரசாணை (நிலை) எண் 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.4) துறை, நாள் 02.08.2007ன்படி 24 மாவட்டங்களில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி ரூ.3.76 கோடி செலவில் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

## 6.18. வாகனங்கள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலை குழு தனது பரிந்துரை எண்.13.2 ல் “ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு வாகனம் மட்டுமே இருப்பதாகவும், அதனையே ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர், இரு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் இரு ஒன்றியப் பொறியாளர்களும் பயன்படுத்தி வருவதாகவும், 1997 முதல் 1999ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அனைத்து வட்டாரங்களுக்கும், அலுவலர்கள் திட்டப் பணிகளை அதிக அளவில் பார்வையிடும் பொருட்டு, இரண்டாவது வாகனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் இரு வாகனங்களுக்கு தனித் தனியே எரிபொருள் குறித்து வரன்முறை இருந்த போதிலும், ஒரு வாகனம் பெரும்பாலும் பெருந்தலைவரின் பயன்பாட்டிலேயே உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், மாவட்ட ஊராட்சி தலைவருக்கு வழங்கியதைப்போல

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவருக்கு தனியே ஒரு வாகனம் வழங்கப்படுவதுடன் இரு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் திட்டப் பணிகளை செவ்வனே பார்வையிடும் பொருட்டு தலா ஒரு வாகனம் இருக்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது.

**2.** மேற்காணும் உயர்நிலைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை எண் **36**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.**1**) துறை, நாள் **04.03.2008**ல் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியோருக்கு, ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து வாகனங்கள் வாங்க வழி செய்யப்பட்டுள்ளது.

**3.** அதன்படி, ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறின் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியோரை உள்ளடக்கிய குழுவானது, **10.03.2008** அன்று **18.287** கோடி மதிப்பீட்டில், ஒரு வாகனம் உத்தேசமாக ரூ.**4.75** இலட்சம் என்ற மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்களுக்கு **385** வாகனங்கள் வாங்கவும் மேற்படி செலவினத்தை ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் அளித்துள்ளது.

**4.** அதனைத் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியப் குழுத்தலைவர்களுக்கு வாகனங்கள் வழங்கும் பொருட்டு **385** டாடா ஸ்பேசியோ கோல்டு (BS.III) ரக வாகனங்கள் வழங்க சென்னை டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன. மேற்படி வாகனங்களை சரியாக ஒப்படைக்கவும், எளிதில் கண்காணிக்கவும் ஏதுவாக கொள்முதல் ஆணை இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டது. முதல்கட்டமாக டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திலிருந்து ரூ.**8,52,74,400** மதிப்பில் **200** வாகனங்கள் ரூ.**4,26,372/–** வீதம் (DGS&D) விலை ரூ.**3,73,378** + விற்பனை வரி **12.5%** ரூ.**46,672/–** + போக்குவரத்து செலவினம் ரூ.**6,322/–) 10.03.2008** அன்று ஆணையிடப்பட்டு வாகனங்கள் பெறப்பட்டன. இரண்டாவது கட்டமாக மீதமுள்ள **185** வாகனங்கள், அப்போது நடப்பிலிருந்த விலையான ரூ.**4,37,882** (DGS&D) விலை ரூ.**3,83,609** + விற்பனை வரி **12.5%** ரூ.**47,951/–** + போக்குவரத்து செலவினம் ரூ.**6,322**= ரூ.**4,37,882**) செலவில் வாங்க **29.04.2008** அன்று கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. அதன்படி, **385** வாகனங்களும் முழுமையாக ரூ.**16,62,82,570/–** செலவில் வாங்கப்பட்டன.

**5.** ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் **2007–08**ன் கீழ் ரூ.**8.95** கோடி மதிப்பில், **168** வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி) மற்றும் **32** உதவி செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) ஆகியோருக்கு மகிந்திரா பொலிரோ வாகனங்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ரூ.**10** கோடி மதிப்பில், **207** வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வட்டார ஊராட்சி) மற்றும் **2** உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியோருக்கு மகிந்திரா பொலிரோ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.19. எரிபொருள்

உயர்நிலைக் குழுவின் இடைக்கால பரிந்தரையின்படி, அரசாணை எண் (பல்வகை) **127**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.**4**) துறை, நாள் **12.07.2007**ல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆகியோரின்

வாகனங்களுக்கான எரிபொருள் மாத ஒதுக்கீட்டை 100 லிட்டரிலிருந்து 150 லிட்டராகவும், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வாகனத்திற்கான எரிபொருள் மாத ஒதுக்கீட்டை 75 லிட்டரிலிருந்து 100 லிட்டராகவும் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

## 6.20. கிராம ஊராட்சிப் பணியமைப்பு

### *(அ) கிராம ஊராட்சி உதவியாளர்களுக்கு கால முறை ஊதியம் நிர்ணயித்தல்*

கிராம ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் ஊராட்சி எழுத்தர்கள் 01.09.2006 முதல் கால முறை ஊதியத்தில் கொண்டுவரப்படுவார்கள் என மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் 11.08.2006 அன்று சட்ட சபையில் அறிவித்தார். அதன்படி அரசாணை (நிலை) எண் 175, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி5) துறை, நாள் 05.12.2006ல், கிராம ஊராட்சி உதவியாளர் நிலை I க்கு ரூ.1300-20-1500-25-2000 என்ற புதிய ஏற்ற முறையிலும், கிராம ஊராட்சி உதவியாளர் நிலை II க்கு ரூ.625-10-725-20-95 என்ற ஊதிய ஏற்ற முறையிலும் நிர்ணயம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இந்த அரசாணையில் காலியாக உள்ள 592 ஊராட்சி உதவியாளர் பணியிடங்களை நிரப்பவும் அனுமதித்துள்ளது. ஊராட்சி உதவியாளர்களின் தகுதிகள், நிர்வாகக் கட்டுப்பாடு, கடமைகள் பொறுப்புகள் ஆகியனவும் அரசாணையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

### *(ஆ) மக்கள் நலப்பணியாளர்களுக்கான பணியிடம் தோற்றுவித்தல்*

அரசாணை (நிலை) எண் 51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 5)துறை, நாள் 12.06.2006ல் 12,618 மக்கள் நலப்பணியாளர்கள் பணியிடங்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் நலப்பணியாளர்களுக்கு, மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- மற்றும் பயணப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ50/- வழங்கப்படும் என ஆணையிடப்பட்டதுடன் மக்கள் நலப் பணியாளர்களுக்கான கடமைகளும் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 176, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 5) துறை, நாள் 05.12.2006ல் கூடுதலாக 482 மக்கள் நல பணியாளர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

### *(இ) ஊராட்சி ஒன்றியப் பொருத்துனர் உதவியாளர்களுக்கான காலமுறை ஏற்ற ஊதியம்*

அரசாணை (நிலை) எண்.55, ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி (சி 5) துறை, நாள் 15.06.2006ன்படி, 01.04.07 வரை தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 933 பொருத்துனர் உதவியாளர்கள், முறையான ஊதிய ஏற்ற முறையில், ஊராட்சி ஒன்றியங்களின் இரவு காவலராகவும், அலுவலக உதவியாளராகவும் பணியமர்த்தப்பட்டனர்.

## 6.21. குறிப்பிட்ட சில கிராம ஊராட்சிகளை தொன்மை வாய்ந்த நகரங்களாக அறிவித்தல்

அரசாணை (நிலை) எண் 5, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 2) துறை, நாள் 19.01.2007ல் 10 கிராம ஊராட்சிகள், தொன்மைவாய்ந்த நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இக்கிராம

ஊராட்சிகள், தொல்லியல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நகர் மற்றும் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் ரூ.50 இலட்சம் மானியம் பெற வழி வகை செய்கிறது.

### 6.22. விருதுகள்

***சிறந்த முறையில் செயல்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது***

அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை, நாள் 05.09.2006ன்படி உத்தமர் காந்தி ஊராட்சி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் சிறந்த பூர்வாங்கப் பணிகள், புதுமையான முயற்சிகள் போன்ற இனங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மிக சிறப்பாக பணியாற்றியுள்ள 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ.5 இலட்சத்துக்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களின் மறைவுக்குப் பின்னரும் இந்த பரிசுகள் வழங்கப்படும். 2006–07ஆம் ஆண்டிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட 124 கருத்துருக்களில், 45 கருத்துருக்கள் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையிலான குழுவின் தல ஆய்வுக்கு தேர்வு செய்யப்பட்டு, 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.10.2007 அன்று வழங்கப்பட்டது.

2007 - 08 ஆம் ஆண்டிற்கு இந்த விருதுகள் வழங்குவதற்காக ரூ.75 லட்சம் அனுமதிக்கப் பட்டு 15 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

# 7. ஊராட்சிகளின் நிதி

# 7. ஊராட்சிகளின் நிதி

## 7.1. மாநில நிதி ஆணைய மானியம் (2006–07)

| *2வது மாநில நிதி ஆணைய நிதி பங்கீட்டு முறை* | | |
|---|---|---|
| *கிராம ஊராட்சிகள்* | : | *47%* |
| *ஊராட்சி ஒன்றியங்கள்* | : | *45%* |
| *மாவட்ட ஊராட்சிகள்* | : | *8%* |

அரசமைப்பு 73 மற்றும் 74 வது திருத்தச் சட்டம் – பிரிவுக் கூறு 243–I மற்றும் 243Yன்படி, உள்ளாட்சி அமைப்புகளின் வரி ஆதாரங்களை ஆய்வு செய்யவும், அவற்றை மேம்படுத்தவும், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பகிர்வு பணியினை மாநில அரசு கண்காணிக்கும் பொருட்டு மாநில நிதி ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி (2002–03 முதல் 2006–07 வரை) மாநிலத்தின் மொத்த நிகர வரி வருமானத்தில் 8 சதவீதம் (கேளிக்கை வரி நீங்கலாக) 2006–07ஆம் ஆண்டில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையே 58 : 42 என்ற வீதத்தில் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 87 சதவீதம் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பிரித்தளிக்கப்பட்டுள்ளது. இம்மானியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாதந்தோறும் விடுவிக்கப்படுகிறது. மீதமுள்ள 13 சதவீதம் நிதி, சமன்பாடு நிதி (6%) ஊக்க நிதி (5%) மற்றும் காப்பு நிதி (2%) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மாநில நிதி ஆணையம் மானியம் பொதுவாக பின்வருமாறு பயன்படுத்தப்படுகிறது.

- அ) ஊதியங்கள், ஒய்வூதியங்கள், அலுவலக பராமரிப்பு முதலியன
- ஆ) குடிநீர் வசதிகளை பராமரித்தல்
- இ) தெருவிளக்குகள் பராமரிப்பு மற்றும் மின்கட்டணம் செலுத்துதல்
- ஈ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பு
- உ) சிறு பாசன கண்மாய்கள் பராமரிப்பு
- ஊ) பொது சுகாதாரம், துப்புரவுப் பணிகள், கழிவு நீர் அகற்றுதல் முதலியன.

2006–07ம் ஆண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதி ஆணைய மானியமாக ரூ. 1,224.76 கோடியினை அரசு விடுவித்துள்ளது.


## 7.2. மாநில நிதி ஆணைய மானியம் (2007–08)

| *3வது மாநில நிதி ஆணைய நிதி பங்கீட்டு முறை* | | |
|---|---|---|
| *கிராம ஊராட்சிகள்* | : | *60%* |
| *ஊராட்சி ஒன்றியங்கள்* | : | *32%* |
| *மாவட்ட ஊராட்சிகள்* | : | *8%* |


2007–08 முதல் 2011–12 வரையான காலங்களுக்கு மூன்றாவது மாநில நிதி ஆணையம் 02.12.20004 அன்று அமைக்கப்பட்டது. அரசாணை எண் 199, நிதி (FC .IV) துறை, நாள் 25.05.2007ல் மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

- பகிர்வு நிதியினை மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக 2007–08ல் உயர்த்த வேண்டும். இந்த பகிர்வு நிதி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 :42 என்ற வீதத்தில் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

- 2007–2008 ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58% பகிர்வு நிதி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32: 8 என்ற வீதத்தில் பிரித்தளிக்கப்பட வேண்டும்.




கடந்த ஆண்டுகளில், கிராம ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்ட மாநில நிதி ஆணைய மானியம் மின்வாரியத்திற்கு குறைந்தபட்ச மின் கட்டணம் செலுத்தவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கட்டணம் செலுத்துவதற்கும் பல ஊராட்சிகளில் போதுமானதாக இல்லை. எனவே, ஊராட்சி அமைப்புகளின் அவசியமான பணிகளான குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணிகள், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை அமைக்கவும், பராமரிக்கவும் ஏதுவாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு நிதியிலிருந்து கிராம ஊராட்சிகளுக்கான பங்கினை 60 சதவீதமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.



- அவ்வாறு ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள 60 சதவீதத்தில் 5 சதவீதம் உள்கட்டமைப்பு நிதிக்கு ஒதுக்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளுக்கான 55 சதவீதம் பங்கீட்டில், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் சமமாக வழங்கும்பொட்டு குறைந்தபட்ச மான்யமாக ரூ. 3 இலட்சம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதமுள்ள தொகை மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும்.

- 2007–2008ஆம் ஆண்டில், கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 950.15 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 506.75 கோடியும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ. 126.69 கோடியும் ஆக மொத்தம் ரூ. 1,583.59 கோடி நிதியினை அரசு விடுவித்துள்ளது.

### 7.3. மத்திய நிதி ஆணைய மானியம்

| *மத்திய நிதி ஆணைய நிதி பங்கீட்டு முறை (2006–07 – முதல் அரையாண்டு)* | |
|---|---|
| *கிராம ஊராட்சிகள்* | *: 80%* |
| *ஊராட்சி ஒன்றியங்கள்* | *: 20%* |

பன்னிரெண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு 2005–2006 முதல் 2009–10 வரையிலான 5 ஆண்டு காலங்களுக்கு ரூ. 870 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில், பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தினை, குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்த வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது. மேற்படி மானியத் தொகையினை குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் தொடர்பான பழுது பார்த்தல், புதுப்பித்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு பயன்படுத்தவேண்டும். இம்மானியம், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 80:20 என்ற வீதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2006–2007ஆம் ஆண்டிற்கு ரூ. 174 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் குறித்த பொறுப்புகள் கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே இருப்பதால், பன்னிரெண்டாவது நிதி ஆணைய முழு மானியத்தையும் 80: 20 என்ற விகித அடிப்படையில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிப்பதற்கு பதிலாக மொத்த மானியத்தையும் கிராம ஊராட்சிக்கே அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீடு மக்கள் தொகை அடிப்படையில் அமையும். கிராம ஊராட்சிகளுக்கு அளிக்கப்படும், பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானிய தொகை குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பணிகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். அதனடிப்படையில் அரசாணை எண் 19, ஊரக வளச்சி மற்றும் ஊராட்சி (சி 2) துறை, நாள் 26.02.2007ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*2006–07ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிலிருந்து பன்னிரெண்டாவது நிதி குழு மான்ய 100% தொகையும் கிராம ஊராட்சிகளுக்கே அளிக்கப்படுகிறது.*

2007–08ஆம் ஆண்டிற்கு ரூ. 174 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 7.4. ஒப்படைக்கப்பட்ட வருவாய் (2006–2007)

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் என்பது தலவரி, தலமேல்வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான மிகு வரி, கேளிக்கைவரி, சிறுகனிமங்கள் மீதான உரிம கட்டணம், குத்தகை தொகை மற்றும் சமூக காடுகள் ஏலத் தொகை ஆகியவை உள் அடங்கியது. தலவரி மற்றும் தலமேல்வரி ஆகியவை வருவாய்துறையினரால் வசூலிக்கப்படுகிறது. முத்திரை தாள் மீதான மிகு வரி பதிவுத்துறை மூலமாகவும் கேளிக்கைவரி, வணிகவரித்துறை மூலமாகவும் வசூலிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட வருவாய் தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### *(i) தலவரி மற்றும் தலமேல்வரி*

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் பிரிவு 167ல், மாநிலத்தில் வசூலிக்கப்படும் நிலவரியில் இருந்து ஒவ்வொரு ரூபாய்க்கும் தலவரி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் மொத்த தொகையும் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதேபோல் மேற்கண்ட சட்டப் பிரிவு 168ன்படி தலமேல்வரி ஊராட்சி ஒன்றிய குழு விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தலவரி, தலமேல்வரிகளை விதித்தல், வசூலித்தல் மற்றும் அதனை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சரி கட்டுதல் ஆகியவை மாவட்டங்களிலுள்ள வருவாய் துறை மூலம் நடைபெற்று வந்தன.

### *(ii) முத்திரைத்தாள் கட்டணம் மீதான மிகுவரி*

**_2006–07ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.228.73 கோடி_**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் பிரிவு 175ல் முத்திரைத்தாள் கட்டணம் மீதான மிகுவரியினை கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை காலாண்டு தவணையாக பதிவுத் துறையினரால் மாவட்ட அளவில் சரிகட்டப்படுகிறது.

### *(iii) கேளிக்கை வரி*

ஊரக பகுதிகளில் வசூலிக்கப்படும் கேளிக்கை வரிகளில் 90 சதவிகிதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இத்தொகை 70 :30 என்ற விகிதத்தில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வணிகவரித் துறை மூலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கேளிக்கை வரியாக ரூ. 185.57 இலட்சம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

### *(iv) கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*

சிறு கனிமங்கள் மூலம் கிடைக்கும் குத்தகைத் தொகை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் இது வருவாய் துறையிலும் பின்னர், புவியியல் மற்றும் கனிம வளத்துறை என்ற தனிப்பட்ட துறையிலும் இருந்தது. இத்தொகையினை அந்தந்த நிதியாண்டு முடிவடைந்ததும் ஏப்ரல் மாதத்தில், ஊரக உள்ளாட்சிகளுக்கு சரிகட்ட அறிவுரைகள்

வழங்கப்பட்டன. 02.10.2003 முதல் பொதுப்பணித் துறை மணல் குவாரிகளை நிர்வகித்து வருவதுடன் அதன் வரவினங்கள் அரசுக் கணக்கிற்கு செல்கிறது. இருப்பினும் உரிமைக் கட்டணம் உள்ளாட்சி அமைப்புகளுக்கே பிரித்து வழங்கப்படுகிறது.

### *(v) மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயினை ஒருங்கிணைத்தல் ( 2007–08)*

தலவரி, தலமேல்வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான மிகு வரி, கேளிக்கை வரி, சுரங்கம் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை வரி, சமூகக் காடுகளிலிருந்து பெறப்படும் வருவாய் ஆகியவை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வருவாய்களாகும். தலவரி மற்றும் தலமேல் வரி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் விதிக்கப்படுகிறது. முத்திரைத்தாள் கட்டணம் மீதான மிகுவரி பதிவுத்துறையாலும், கேளிக்கை வரி, வணிகவரித் துறையாலும் வசூலிக்கப்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு வந்தன. ஏற்கனவே உள்ள முறையில் ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனங்கள் மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வைப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதுடன், அதிக வேலைப்பளுவும் இருந்தன. மேலும் வருவாயை பிரித்து வழங்குவதில் பெருமளவில் ஏற்றத்தாழ்வு இருந்தது. இதில் மாவட்ட ஊராட்சிக்கு எந்த பங்கும் கிடைப்பதில்லை.


எனவே, இது குறித்து மூன்றவது உயர்நிலை குழு விரிவாக ஆய்வு செய்தது மூன்றவது உயர்நிலை குழுவின் இடைக்கால கலந்தாய்வின்படி, ஒப்படைக்கப்பட்ட வருவாயை பகிர்ந்தளிப்பதில் உள்ள இடர்பாடுகளை களைய ஏதுவாக அரசாணை எண் 168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 04.10.2007ன்படி ஒப்படைக்கப்பட்ட வருவாய் (கனிமம் மற்றும் சுரங்கங்கள் மீதான குத்தகை மற்றும் உரிம கட்டணம் மற்றும் சமூக காடுகள் ஏலமிடுதல் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் தவிர) அனைத்து ஒப்படைக்கப்பட்ட வருவாய்களையும் மாநில அளவில் ஒருங்கிணைத்து, பின்னர் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதனால், ஒப்படைக்கப்பட்ட வருவாயினை சமச்சீரான முறையில் எளிதாகவும், விரைவாகவும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க வழியேற்பட்டுள்ளது.

அதன்படி, 2007–08 ஆண்டுக்கான ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ. 270 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்தது. அதில் மக்கள் தொகையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ. 180 கோடியும் முன்னுரிமை திட்டங்களுக்காக ரூ. 90 கோடியும் மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

# 8. திறன் மேம்பாடு


# 8. திறன் மேம்பாடு

உள்ளாட்சி அமைப்பு களுக்கு மக்களாட்சி அதிகாரப் பரவல், அதிகாரம் பகிர்வு மற்றும் சட்டப்படியான அதிகாரம் அளித்தல் ஆகியவற்றுடன், நிர்வாகத்தினை செம்மையாக நடத்திட போதிய திறன் மேம்பாடு அளித்தல் மிகவும் அவசியமாகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அதிகக் கல்வியறிவு கொண்டவர் களாக இல்லாத நிலையில் அவர் களின் திறனை மேம்படுத்துதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.




## 8.1. திறன் மேம்பாட்டில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் பங்கு

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலமாக பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலை நகர், தலைமை பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம், சத்தியவிஜயநகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை மற்றும் டி.கல்லுபட்டி ஆகிய பயிற்சி நிறுவனங்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங் களுக்கு தேவையான பயிற்சிகளை அளித்து வருகிறது.



## 8.2. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை குறித்த பணிகளை மேற்கொள்ளும் மாநில அளவில் தலைமை நிறுவனமாக மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் விளங்குகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் தன்னாட்சி அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1990ல் தன்னாட்சி நிலையினை பெற்று, 1991ஆம் ஆண்டு முதல் மறைமலைநகர் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

### 8.2.1. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய பணிகள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், பயிற்சி, ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் தகவல் பரிமாற்றம் போன்ற முக்கிய கூறுகள் மூலமாக திட்டங்களை செயல்படுத்துதலில் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் உருவாவதற்கு பெரும் பங்கு வகிக்கிறது.

### 8.2.2. மாநில ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சி சாதனை 2006–07

2006–07ஆம் ஆண்டில் 196 அணிகளாக 18 தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. அதில் சுய உதவி குழு உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், அமைச்சு பணியாளர்கள், அரசு சாரா பணியாளர்கள், ஊராட்சி உதவியாளர்கள், மக்கள் நல பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள், ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்பு செயலர்கள், திட்ட அலுவலர்கள், மாவட்ட திட்ட மேலாளர்கள், உதவி திட்ட மேலாளர்கள், திட்ட செயலாக்க குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் ஆக மொத்தம் 14,484 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

### 8.2.3. மாநில ஊரக வளர்ச்சி நிறுவன ஆண்டு பயிற்சி சாதனை 2007–08

2007–08ஆம் ஆண்டில் 158 அணிகளாக 22 தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதில் சுய உதவி குழு உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், அமைச்சு பணியாளர்கள், அரசு சாரா பணியாளர்கள், ஊராட்சி உதவியாளர்கள், உதவி திட்ட அலுவலர்கள், இணை இயக்குநர்கள், திட்ட பொருளாதார வல்லுநர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் பலர் ஆக மொத்தம் 9,202 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

## 8.3. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் சத்தியவிஜயநகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை மற்றும் டி.கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளில் உள்ள நடு நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 8.3.1. மேலாண்மை

அரசு கட்டுப்பாட்டின் கீழ் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இணை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன முதல்வராகவும், முதல்வருக்கு உதவியாக பயிற்சி அளிப்பவர்கள் பல்வேறு துறைகளிலிருந்தும் மாற்றுப்பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

### 8.3.2. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன ஆண்டு பயிற்சி சாதனை 2006–07

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் ஊராட்சி செயல்பாடுகள் மற்றும் கணினி பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2006–07ஆம் ஆண்டில் பொதுவான பயிற்சி திட்டங்கள் விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்), மற்ற விரிவாக்க அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவியாளர்கள், ஊர் நல அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், காசாளர், ஊராட்சி உதவியாளர்கள், சாலை ஆய்வாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் மற்றும் கணினி பயிற்சி திட்டங்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், ஊர் நல அலுவலர்கள், தட்டச்சர், காசாளர் ஆகியோர்களுக்கும், புத்தாக்கப் பயிற்சிகள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் நடத்தப்பட்டன. மேற்படி 5 மண்டல ஊரக வளர்சசி நிறுவனங்களிலும் 384 பயிற்சிகள் நடத்தப்பட்டு, அதில் 14,652 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

### 8.3.3. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன ஆண்டு பயிற்சி சாதனை 2007–08

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் 2007–08ஆம் ஆண்டில் பொதுவான பயிற்சி திட்டங்கள் விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்), மற்ற விரிவாக்க அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவியாளர்கள், ஊர் நல அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், காசாளர், ஊராட்சி உதவியாளர்கள், சாலை ஆய்வாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் கணினி பயிற்சி திட்டங்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், ஊர் நல அலுவலர்கள், தட்டச்சர், காசாளர் ஆகியோர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சிகள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் நடத்தப்பட்டன. மேற்படி 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களிலும் 603 பயிற்சிகள் நடத்தப்பட்டு, அதில் 17,717 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

### 8.3.4. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன உள் கட்டமைப்பு வசதிகள்

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் தரமான பயிற்சிகள் அளிப்பதற்கு உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் அவசியமாகிறது. அதற்காக அரசு பகுதி–II திட்டத்தின் கீழ் 2007–08ஆம் ஆண்டில் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களிலும் வகுப்பறை, சமையலறை மற்றும் விடுதிகளை மேம்படுத்த ரூ.1 கோடி அனுமதித்துள்ளது. மேலும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு அரசு ரூ.1.25 இலட்சம் மதிப்பில் நிகரி இயந்திரம் வாங்க அனுமதித்துள்ளது.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் விடுதி வசதிகள் போதுமானதாக இல்லாததால், அரசு 2007-08 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கும் நவீன சமையலறையுடன் கூடிய புதிய விடுதிகளை கட்டுவதற்கு ரூ.50 இலட்சம் வீதம் அனுமதித்துள்ளது.

## 8.4. தமிழக அரசால் உருவாக்கப்பட்ட பயிற்சி நிதி

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் 12.07.2007 அன்று சட்டப்பேரவையில் ஊராட்சி நிர்வாகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும் பயிற்சி நடத்த ஏதுவாக பயிற்சி நிதி உருவாக்கப்படும் எனவும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி தொகுப்பு நிதிக்காக ரூ.3 கோடி தனியே ஒதுக்கப்படும் எனவும் அறிவித்தார். மாநிலத்திற்குள்ளேயும், மாநிலத்திற்கு வெளியிலும் உள்ள நல்ல திட்டங்கள் மற்றும் பணிகளை நேரடியாக தெரிந்து கொள்ளும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பட்டறிவு பயணத்திற்காகவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

அதன்படி, அரசாணை எண்.103, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி 3) துறை, நாள் 19.06.2007ல் 2007-08ஆம் ஆண்டுக்கென ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் திறன் மேம்பாட்டிற்காக, ரூ.3 கோடியினை அரசு விடுவித்து ஆணையிட்டுள்ளது.

இப்பயிற்சிக்கான பாடத்திட்டங்களையும், குறிப்பிட்ட பயிற்சி திட்டங்களையும், இறுதி செய்யும் பொருட்டு, அரசு முதன்மை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள் தலைமையில், பயிற்சி நிதியினை நிர்வகித்திட ஒரு உயர்நிலை குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 8.5. இருநாள் பயிற்சி மற்றும் கருத்துப்பட்டறை

அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு காஞ்சிபுரம், வேலூர், கடலூர், சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயமுத்தூர், திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள பல்வேறு இடங்களில் இரண்டு நாள் கருத்துப் பட்டறை நடத்தப்பட்டது. ஊராட்சியின் செயல்பாடுகள், ஊராட்சி நிதிகள், திட கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, தலைமைப்பண்புகள் குறித்து சிறந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. 475 கிராம ஊராட்சி தலைவர்கள் இப்பயிற்சி திட்டத்தில் பங்கேற்றனர். இக்கருத்துப்பட்டறைக்காக ரூ.1.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

## 8.6. பட்டறிவுப் பயணம்

சிறந்த செயல்பாடுகளைப் பார்வையிடவும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் ஏற்பாடு செய்யப்பட்டது. மாவட்டங்களிலுள்ள கிராம ஊராட்சி தலைவர்கள் குழுக்களாக ஐந்து நாள் பட்டறிவுப்பயணமாக அழைத்து செல்லப்பட்டனர். இப்பயணம் கோயமுத்தூர் மாவட்டம், ஓடந்துறை கிராம ஊராட்சி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயமுத்தூர், தோட்டக்கலை ஆய்வு நிலையம், உதகமண்டலம் மற்றும் கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள “சிறுதுளி” யின் மூலம் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். போக்குவரத்து, உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பயணத்தில் 8 குழுக்களாக 433 கிராம ஊராட்சி தலைவர்கள்,பங்கேற்றனர். இதற்காக ரூ.21.58 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

## 8.7. வெளியீடுகள்

ஊராட்சி அமைப்புகளுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கும் பயனுள்ள வகையில் மதிப்பு வாய்ந்த வெளியீடுகளை அரசு கொண்டு வந்துள்ளது.

***(1) அரசு ஆணைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை தொடர்பாக அரசு வெளியிட்ட வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகளின் தொகுப்பு***

- அரசு ஆணைகளின் தொகுப்பு (2006)
- அரசு ஆணைகளின் தொகுப்பு (2007)

***(2) சட்டம், விதிகள், அரசு ஆணைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளுக்கான திருத்தங்கள்***

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தொடர்பான சட்டம், விதிகள் அரசு ஆணைகள் மற்றும், வழிகாட்டி நெறிமுறைகளுக்கான திருத்தங்கள் 2007ஆம் ஆண்டு வரை தொகுத்து வெளியிடப்பட்டதுடன் இத்துறையின் மாநில, மாவட்ட மற்றும் வட்டார நிலையில் உள்ள அனைத்து அலுவலகங்களும் கீழ்கண்ட தலைப்புகளில் எளிதில் பயன்படுத்தும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.

- ஊராட்சி நிர்வாகம் தொடர்பான முக்கிய விதிகள் மற்றும் அரசு ஆணைகள் (தொகுப்பு I)
- ஊராட்சி நிர்வாகம் தொடர்பான முக்கிய விதிகள் மற்றும் அரசு ஆணைகள் (தொகுப்பு II)
- 2007ஆம் ஆண்டு முடிய மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான அரசு ஆணைகள், வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் அடங்கிய தொகுப்பு.
- 2007ஆம் ஆண்டு முடிய மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான அரசு ஆணைகள், வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் அடங்கிய தொகுப்பு.
- பணியமைப்பு தொடர்பான பணி விதிகள், முக்கிய அரசு ஆணைகள் மற்றும் அறிவுரைகள் (தொகுப்பு I)
- பணியமைப்பு தொடர்பான பணி விதிகள், முக்கிய அரசு ஆணைகள் மற்றும் அறிவுரைகள் (தொகுப்பு II)

***(3) முக்கிய அலுவலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி அமைப்புகளுக்கான மாநில அளவிலான தொலைபேசி எண்கள் தொகுப்பு***

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்குள் கலந்துரையாடவும், அலுவலர்களுடன் தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தொடர்பான அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளவும் தெளிவுரை பெறவும் ஏதுவாக மாநில அளவில் தொலைபேசி எண்கள் தொகுக்கப்பட்டு, அச்சிடப்பட்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டன.

***(4) மாவட்ட அளவிலான தொலைபேசி எண்கள் தொகுப்பு***

கிராம ஊராட்சி தலைவர்களின் மண்டல மாநாடுகளில் மாவட்டம் வாரியான தொலைபேசி எண்கள் அடங்கிய தகவல் தொகுப்பு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

**மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் சில முக்கியமான பயனுள்ள வெளியீடுகளை வெளியிட்டுள்ளது.**

### *(1) கிராம ஊராட்சி தலைவர்களுக்கான கையேடு*

15.11.2006 முதல் 30.11.2006 வரை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சி தலைவர்களுக்கு 2 நாள் புத்தாக்க பயிற்சி நடத்தப்பட்டது. 80 சதவீதத்திற்கு மேற்பட்ட கிராம ஊராட்சி தலைவர்கள் முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களாக உள்ள நிலையில், அவர்களின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள், கணக்குகளை பராமரித்தல், கூட்டங்கள் நடத்துதல் மற்றும், தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் போன்ற திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தெரியப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கையேடு ஒன்று அச்சிடப்பட்டு, பயிற்சியில் பங்கு பெற்ற அனைவருக்கும் வழங்கப்பட்டது.

### *(2) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் குறித்த நூல்கள்*

மாவட்ட ஊராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் மற்றும் நகர உள்ளாட்சி மன்ற தலைவர்களுக்கான மாநில அளவிலான மாநாடு, 18.03.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக செயல்படுவதிலும் கூடுதல் அதிகாரம் வழங்குவதிலும் உள்ள பிரச்சினைகள் குறித்து விவாதம் மற்றும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் தொடர்பான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் இதர விபரங்கள் அச்சிடப்பட்டு புத்தகமாக கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

### *(3) கிராம ஊராட்சிகளுக்கான நூல் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 மீதான கையேடு*

கிராம ஊராட்சிகளின் செயல்பாட்டில் அதிகாரப்பகிர்வு மற்றும் அதில் உள்ள சிரமங்கள் குறித்து அறிய மாநில அளவிலான கருத்தரங்கு ஈரோடு (24.07.2007), திருச்சிராப்பள்ளி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007) மற்றும் விருதுநகர் (23.08.2007) ஆகிய மாவட்டங்களில் மண்டல அளவிலான கருத்தரங்குகள் நடைபெற்றன. மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சி தலைவர்களில் 11,984 தலைவர்கள் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர். அனைத்து மண்டல கருத்தரங்கிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிராம ஊராட்சி குறித்த நாளது வரையான நூலும் தகவல் உரிமை சட்டம் குறித்த கையேடும், அச்சிடப்பட்டு, கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டன.

### *(4) புதிதாக பணியமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கான தொழில்நுட்ப கையேடு*

ஊரக வளர்ச்சிப் பொறியியல் பிரிவினை வலுப்படுத்தும் நோக்கில் வட்டார அளவிலான பொறியாளர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு செறிவான பயிற்சி அளிக்கப்பட்டது. கலந்துகொண்ட அனைவருக்கும் பயன்படக்கூடிய தொழில் நுட்ப கையேடு, அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.